# தமிழரசு

மார்ச் 1 - 15, 2000 ரூ. 5





டான்வா பண்ணை மகளிர் குழு அமைப்போம்!



முதல் மற்றும் கடைசிப்பக்க அட்டையில்

**மகளிர் தின விழா**

இரண்டு மற்றும் மூன்றாம் பக்க அட்டையில்

**பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்**


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
மாசி – பங்குனி
மார்ச் 1–15, 2000
மலர் : 31 இதழ் : 17
விலை ரூ.5


*இந்த இதழில்...*


- மகளிர் குழுக்கள் சமுதாய மாற்றத்தின் அடையாளம் ..... 2
- பெண்ணுரிமையும் பெண்ணின் பெருமையும் .................. 6
- பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் .................. 8
- தூய்மை சென்னை 2000 .................. 15
- மக்களின் வளர்ச்சிக்கும் வளமைக்கும் உறுதியளிக்கும் தமிழ்நாடு அரசு .................. 18
- தொடரும் பயணம் .................. 25
- ததீசினி .................. 41




**திருக்குறள்**

*செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்*
*செல்வத்து ளெல்லாந் தலை.*

**செ**ழுமையான கருத்துகளைச் செவிவழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*



# மகளிர் குழுக்கள் சமுதாய மாற்றத்தின் அடையாளம்

*உலக மகளிர் நாள் விழாவில் முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்*

உலக மகளிர் நாள் விழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அரசின் சமூக நலத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு அதிலே கலந்து கொள்ளுகின்ற நல்ல வாய்ப்பினை நான் பெற்றமைக்காக பெருமகிழ்ச்சி அடை கின்றேன். இங்கே குழுமியிருக்கின்ற இந்தக் கூட்டத்தைப் பார்த்து திருமதி. ரேவதி தன்னுடைய வியப்பை வெளிப்படுத்தினார். தாமதமாக வராமல் சற்று முன்னே வந்திருந்தால் இன்னொரு பங்கு கூட்டத்தை இந்த வள்ளுவர் கோட்டத்திலே ரேவதி பார்த்திருக்கக் கூடும். அவ்வளவு பெரும் கூட்டமாக இங்கே இந்த விழாவிலே கலந்து கொண்டு உங்களுடைய முன்னேற்றத்திலே உங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

**ஆணும் பெண்ணும் சமம் என்பதை பாரதிதாசன் கவிதையில் கூறியிருக்கிறார்**

பேசியவர்கள் எல்லாம் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லி மேடையிலே இருந்த எங்களையெல்லாம் கொஞ்சம் நெளிய வைத்தார்கள். நானே சொல்லுகிறேன், என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம் கூட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளிட்ட இந்த இயக்கத்தினர் அனைவருமே பெண்களின் விடுதலைக்காக, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டவர்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

மிகச் சுலபமாக பாரதிதாசன் 'ஆணும் பெண்ணும் சமம் தான்' என்பதை உணர்த்தியிருக்கிறார். ஏணை அசைத்தலும் கூடும், அது யார் அசைத்தாலும் ஆடும் என்பது அவருடைய கவிதை வரி. குழந்தை தூங்கும் ஏணையை அது விழித்துக் கொள்ளும் போது பெண்கள் அதை அசைத்தாலும் ஆடும். பெண்கள் மாத்திரமல்ல, அதை ஆண் அசைத்தாலும் ஆடும். ஆண் அசைக்கின்றான் என்பதற்காக ஏணை ஆடாமல் இருந்து விடாது. அதனால் ஏணையை அசைப்பது பெண்களுக்குத் தான் உரியது என்றிருந்து விடாமல் ஆண்களும் ஏணையை அசைக்க வேண்டும். குழந்தையைப் பராமரிக்க வேண்டும் என்ற அந்தப் பொருளில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியிருக்கிறார்.

இது இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாக இங்கே மேயர் குறிப்பிட்டதைப் போல 1929-ஆம் ஆண்டிலேயே அருகிலே உள்ள செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் பெண்களுடைய



முன்னேற்றத்தையே, விடுதலையையே மையமாக வைத்துப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலே மிக முக்கியமான ஒரு தீர்மானம்தான் ஆண்களைப் போல பெண்களுக்கும் சொத்திலே பங்கு அளிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானமாகும்.

அந்தத் தீர்மானத்தைச் சட்ட வடிவமாக ஆக்குவதற்கு அறுபதாண்டு காலம் தேவைப்பட்டது தமிழ்நாட்டில். இந்தியாவில் முதல்முறையாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய மாநிலம் தமிழ்நாடு, நிறைவேற்றிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். அந்தச் சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றிய போது நான் சொன்னேன் - அறுபதாண்டுகளுக்கு முன்பு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு இன்றைக்கு வடிவம் கொடுக்கிறோம் - என்று சட்டப் பேரவையில் நான் அறிவித்தேன்.

### சாதியை ஒழிப்பதிலே பெண்கள் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள்

ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்து விட்டதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால் இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டுமென்று உத்தமர் காந்தி அடிகள் சொன்னார், பாரதி பாடினார், பெரியார் முழங்கினார், அண்ணா எழுதிக் காட்டினார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் போன்றவர்கள் கவிதைகளை அதற்காக இயற்றினார்கள். ஆனால் உள்ளபடியே சாதியை இன்னமும் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆண்கள் தான். ராமசாமி செட்டியார், குப்புசாமி முதலியார், நடேச அய்யர் என்று சாதியைத் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்திருப்பவர்கள் ஆண்கள்தான். சரஸ்வதி செட்டியார் என்றோ, லட்சுமி முதலியார் என்றோ, பார்வதி கவுண்டர் என்றோ எந்தப் பெண்ணும் சாதிப் பெயரை தங்கள் பெயருக்குப் பக்கத்தில் போட்டுக் கொள்வதில்லை. இதிலிருந்தே ஆண்களை விட பெண்கள் உயர்ந்தவர்கள், சாதியை ஒழிப்பதிலே என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

அத்தகைய ஒரு முற்போக்கான கொள்கை அவர்களுடைய பெயரிலேயே இன்றைக்கு அடங்கியிருக்கின்றது. ஏனென்றால் சாதி என்ற அந்த வாலை அவர்கள் நறுக்கி விட்டிருக்கின்றார்கள். அந்த வாலை எடுத்து ஆண்கள் ஒட்ட வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பல மூடநம்பிக்கைகளை இன்றைக்கு நம் நாட்டுத் தாய்மார்கள், சகோதரிகள் கடைப் பிடிக்கிறார்கள். அவர்கள் மூட நம்பிக்கைகளிலே ஆழ்ந்து போகின்ற காட்சிகளை நான் கண்டு மிக மிக வருந்துகிறேன். ஆண்கள் மூட நம்பிக்கையிலே உழல்வதற்கும் ஒரு குடும்பத்திலே உள்ளவர்கள் மூடநம்பிக்கையிலே உழல்வதற்கும் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள், இன்று வரையில் தாய்மார்களாக இருக்கிறார்கள். அதை தாய்மார்கள் உணர வேண்டும்.

எப்படியென்றால் குழந்தையைத் தொட்டிலிலே இட்டு ஆட்டுகின்ற நேரத்தில் குழந்தை தூங்க மறுத்து அழுது கொண்டிருந்தால் தாயார் செய்கின்ற வேலை என்னவென்றால், பேசாமல் தூங்கு, அழாதே, அழுதால் அஞ்சு கண்ணன் வருவான், பத்து கண்ணன் வருவான் என்று அந்த அஞ்சு கண்ணனைப் போல் குரல் கொடுத்து, குரல் கொடுக்க முடியாத தாய்மார்கள் தங்களுடைய விரல்களைத் தொண்டையிலே வைத்து அழுத்திக் கொண்டு ஒருவிதமான ஓசையை எழுப்பி அஞ்சு கண்ணன் வருகிறான் என்று குழந்தையைப் பயமுறுத்தியே தூங்க வைக்கிறார்கள். இப்படி குழந்தைப் பருவத்திலேயே குழந்தைக்கு பய உணர்ச்சி ஊட்டப்படுவதால் எதிர்காலத்திலே அந்தக் குழந்தை வீரமாக வளர முடியாமல் துணிவுள்ளவர்களாக வளர முடியாமல் போகின்றது என்பதை அருமைத் தாய்மார்களும், சகோதரிகளும் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### மூடநம்பிக்கையிலே உழலும் நிலைமை தாய்மார்களிடத்திலே இருக்கிறது

சாதி என்கின்ற அந்த அவச் சொல்லை, அந்தக் களங்கத்தைத் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்துக் கொள்ளாவிட்டாலுங் கூட மூட நம்பிக்கையிலே இன்றைக்கு உழன்று கொண்டிருக்கின்ற நிலை தாய்க் குலத்திலே இருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. திடீரென்று ஒரு நாள் பத்திரிகையிலே சிலுவை குழந்தை பிறந்திருக்கிறது. கோடம்பாக்கத்திலே அந்தக் குழந்தை இருக்கிறது. அதைப் பார்க்க ஏராளமான மக்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள், என்று அந்த சிலுவைக் குழந்தையினுடைய படத்தையும் புகைப்படம் எடுத்து பத்திரிகையிலே போடுவார்கள். ஒரு நான்கு நாள் பத்திரிகையிலே பரபரப்பாக அந்தச் செய்தி வரும். பிறகு பார்த்தால் சிலுவையும் இல்லை, குழந்தையுமில்லை, சிலுவையோடு, குழந்தையோட தகப்பனார் எங்கோ ஓடிவிட்டார் என்று செய்திவரும். அதுவரையில் வசூல் நடைபெறும். அந்த வசூலுக்குக் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் நம்முடைய அப்பாவி தாய்மார்கள் தான் என்று எண்ணும் பொழுது நான் கவலைப் படுகின்றேன்.

அதுமாத்திரமல்ல; ஒரு தோட்டத்தில் அல்லது ஒரு வீட்டுக் கொல்லையில் பூக்கின்ற பூக்களிலே ஒரு பரங்கிப் பூ கொஞ்சம் நிமிர்ந்து நின்று பூத்திருக்கும். அதைப் பார்க்கும் பொழுது ஏதோ ஒரு ஜாடையில் பாம்பு படம் எடுத்ததைப் போலத் தெரியும்; உடனே பரங்கிக் கொடியிலே நாகராஜன் தரிசனப்படுகிறான் என்று நான்கு நாள் பத்திரிகையிலே செய்தி வெளியிடுவார்கள். அதைப் பார்க்க ஒரு கூட்டம் செல்லும். இப்படி சாமியார்கள், பூதங்கள், சிலுவைகள் - சிலுவையின் பெயரால் மோசடிகள், இவைகள் எல்லாம் நடைபெறுவதை நாம் தடுத்தாக வேண்டும். அப்படி தடுப்பதற்குத் தாய்மார்கள் முதலில் தங்களுடைய பகுத்தறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அப்படி பகுத்தறிவைப் பெருக்கிக் கொண்டால் அதற்கு ஏற்றவாறு இந்தச் சமுதாய அமைப்பு நல்ல முறையிலே உருவாகும் என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப் பட்டிருக்கின்றேன்.

### பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை அரசு தீட்டிச் செயல்படுத்துகிறது

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பெண்களுக்கு என்று பல திட்டங்களைத்

தீட்டியிருக்கின்றோம். அந்தத் திட்டங்களிலே ஒன்றுதான் மகளிர் சுய உதவிக்குழு திட்டம். குழுக்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் இருபது பெண்களுக்குக் குறையாமல் இணைந்து அந்தக் குழுக்கள் ஒவ்வொரு ஊரிலும் நல்ல முறையில் செயல்படுகின்ற காட்சியை நானே பல இடங்களுக்கு நேரில் சென்று கண்டு களித்திருக்கின்றேன்.

ஏறத்தாழ 23 ஆயிரம் அல்லது 24 ஆயிரம் குழுக்கள் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் குழுக்களாக இருந்த இந்த மகளிர் குழுக்கள் 23 ஆயிரம் அல்லது 24 ஆயிரம் குழுக்களாக இன்றைக்கு அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே இன்றைக்கு இருக்கின்ற மொத்த மகளிர் ஏறத்தாழ நான்கு இலட்சம் பேர் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள் என்பது மகளிர் முன்னேற்றத்திலே அவர்களுக்கே அக்கறை வந்திருக்கின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக் கின்றது. அதிலே அவர்கள் சேர்த்த பணம், அவர்களாக வசூலித்து அவர்கள் செலவழித்துக் கொண்டிருக்கின்ற பணம், அந்தக் குழுக்களில் சேமிப்பாக வந்திருக்கின்ற பணம் மாத்திரம் ஏறத்தாழ 32 கோடி ரூபாய் என்று கேள்விப்படும் பொழுது நான் பெருமை அடை கின்றேன்.

அவரவர்களும் அந்தந்த ஊரில் இந்தக் குழுக்களை அமைத்துக் கொண்டிருக்கின்ற நேர்த்தியைக் காணும் பொழுது, நானே இரண்டு குழுக்களைத் திடீரென்று சென்று பார்த்தேன். வருவதை அறிவித்து இன்ன தேதியில் இத்தனை மணிக்கு வரப்போகின்றேன் என்றெல்லாம் எடுத்துச் சொல்லாமல் திடீரென்று சென்று அந்தக் குழுக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். அவர்களிடத்திலே பேசும் பொழுது எனக்கே தமிழ்நாட்டில் தான் இருக்கின்றோமா என்கின்ற அளவிற்கு சந்தேகம் ஏற்பட்டது. அந்த அளவிற்கு பெண்கள் தங்களுக்குள்ளாக ஒற்றுமையாக இருக்கிறார்கள். பெண்கள் ஒற்றுமையாக இருப்பது என்பது அதிசயம் தான். அந்த அதிசயத்தை இன்றைக்கு தமிழ்நாட்டிலே என்னால் காண முடிகின்றது, இந்தக் குழுக்களின் மூலமாக.

தமிழகத்தில் சமுதாய மாறுதல்களுக்கு
நல்ல அடையாளம்

குழுக்களிலே இருக்கின்ற பெண்கள் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சாதி பாகுபாடு இல்லாமல் எல்லோரும் சகோதரிகள், எல்லோரும் ஒரே குலம் என்கின்ற அளவிலே அவர்கள் பழகுவது, அவர்கள் பயிற்சி பெறுவது, அவர்கள் மற்றவர்களுக்கு உதவுவது இவைகளையெல்லாம் பார்க்கும் பொழுது, அதுமாத்திரமல்ல; கள்ளச் சாராயக் கடைகள் எங்கிருந்தாலும் அதை அகற்ற வேண்டும் என்பதிலே முனைப்பாக குழுக்களிலே இருக்கின்ற பெண்களையும் நான் பார்த்து வியந்து போனேன். கலப்புத் திருமணங்களைச் செய்து வைக்கின்ற பெண்களையும் பார்த்தேன். அனாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கின்ற பெண்களுடைய குழுக்களையும் பார்த்தேன். இவைகளையெல்லாம் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கின்ற பெரிய சமுதாய மாறுதல்களுக்கு அடையாளம் என்று சொன்னால் அது மிகையாகாது.

எனவே இத்தகைய குழுக்களிலே ஒன்றுதான் இன்றைக்கு இந்த விழாவிலே பெருவாரியாக கலந்து கொண்டிருக்கின்ற மகளிர் என்பதையும் நான் மிக நன்றாக அறிவேன்.

கலப்புத் திருமணத்திட்டம் இந்த அரசில் நல்ல முறையிலே நடத்தப் படுகிறது. அதற்காக தொடக்கத்திலே தங்கப்பதக்கம் பரிசளிக்கப் பட்டு இப்பொழுது கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களில், இருவர்களிலே ஒருவர் ஆதிதிராவிட சமுதாயமாக இருந்தால் – தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருந்தால் 20,000 ரூபாய் நிதி வழங்கும் திட்டமாகவும் இருந்து வருகிறது. அதே மாதிரி விதவை மறுமண நிதியுதவி திட்டம் 1975–ஆம் ஆண்டில் இதே தி.மு.கழக ஆட்சியில் தான் தொடங்கப்பட்டு 89–லே இந்தத் திட்டத்திற்கான நிதியுதவி 5,000 ரூபாய் என்றும், 97-98–இல் 7,000 ரூபாய் என்றும் இந்த ஆண்டு முதல் 10,000 ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

தொடக்கப்பள்ளிகளில் பெண்களே ஐந்தாம் வகுப்பு வரையிலே ஆசிரியர்களாக பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் என்கின்ற விதி முறைகள் செய்யப்பட்டு அதுவும் நடைமுறையில் இருக்கின்றது. 73–ஆம் ஆண்டு அப்பொழுது நான் முதலமைச்சராக இருந்த பொழுது தான் காவல்துறையிலே பெண்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று முதல் முதலாக தமிழ்நாட்டிலே காவல் துறையிலே பெண்கள் சேர்க்கப்பட்டதும் 73–ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த பொழுது தி.மு.கழக ஆட்சிலே தான்.

இந்தியாவிலே முதல் தடவையாக 89–ஆம் ஆண்டு தமிழக அரசு அலுவலகங்களிலும், பொது நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புக்களில் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்பட்டு அந்த நியமனங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. அது மாத்திரமல்ல; தொழில் முனையும் முதல் தலைமுறை மகளிர்க்கு 50,000 ரூபாய் வரை மானியம் வழங்குகின்ற சிறப்புத் திட்டமும் இந்த ஆட்சியிலே செயல்படுத்தப்படுகிறது. பெண்களுக்கு 30 விழுக்காடு அளவிற்கு வேலை வாய்ப்பு வழங்கும் தொழிற்சாலைகளுக்கு முதலீட்டில் 15 விழுக்காடு அல்லது உயர்ந்த பட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரை மானியம் உதவி வழங்கி பெண்கள் பல்வேறு தொழிற்சாலைகளிலும் வேலை வாய்ப்பு பெற இந்த ஆட்சியிலே வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஒரு ஒப்பீடு உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால், பல்வேறு பெண்கள் திட்டத்தின்படி கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் உதவி பெற்ற மகளிருடைய எண்ணிக்கை 62 ஆயிரத்து 180 பேர். இந்த 4 ஆண்டு கால கழக ஆட்சியில் 22 இலட்சத்து 8 ஆயிரத்து 357 பெண்கள் உதவி பெற்றிருக்கிறார்கள்.

கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் தரப்பட்ட மொத்த உதவித்தொகை 29 கோடியே 52 இலட்ச ரூபாய். இந்த 4 ஆண்டு காலத்தில் தரப்பட்ட உதவித் தொகை 206 கோடி ரூபாய். இதிலிருந்து இந்த அரசு பெண்களுடைய

முன்னேற்றத்திலே அவர்களுடைய பொருளாதாரத் துறை உட்பட எல்லாவற்றிலும் எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

இங்கே நம்முடைய அமைச்சர் திருமதி சற்குணம் அவர்கள் ஒரு 4 திட்டங்களுடைய பெயர்களை என்னிடத்திலே எழுதிக்கொடுத்து அதற்கு சமுதாயத் தலைவர்களுடைய பெயர்களை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பெயர்கள்

ஏற்கெனவே ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு ''மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம்'' என்று பெயர் சூட்டியிருக்கிறோம். ஏன் மூவலூர் அம்மையார் பெயர் வைத்தோமென்றால் அந்த அம்மையாருடைய வாழ்க்கையில் அனாதைப் பிள்ளைகளுக்கு, விதவைப் பிள்ளைகளுக்குக் கலப்புத் திருமணம் என்ற பெயரிலோ, சாதாரண திருமணங்களோ, பகுத்தறிவுத் திருமணங்க ளாகவோ அந்த அம்மையாருடைய வாழ்நாள் முழுவதும் ஏறத்தாழ ஒரு 10,000 திருமணங்களாவது செய்து வைத்த பெருமாட்டி மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அவர்களாவார்கள்.

அதைப் போலவே விதவைப் பெண்களுடைய மறுமணத்திற்கு ஆதரவளிக்கும் திட்டத்திற்கு ''டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை திருமணத் திட்டம்'' என்று ஏற்கெனவே பெயர்சூட்டி இருக்கிறோம்.

கலப்புத் திருமணங்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்திற்கு ''அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டம்'' என்று பெயர் வைத்திருக்கிறோம். ஏன் அஞ்சுகம் அம்மையார் பெயர் வைக்கப்பட்டது என்றால், எங்கள் வீட்டில்தான் நிறைய கலப்புத் திருமணம் நடந்திருக்கிறது. அதற்கெல்லாம் எங்கள் அம்மா அஞ்சுகம் அம்மையார் தான் ஆதரவாக இருந்தார்கள். ஆகவே அவருடைய பெயர் அந்தத் திட்டத்திற்கு வைக்கப் பட்டிருக்கிறது.

ஆதரவற்ற பெண்களுடைய திருமணத்திற்கு நிதியுதவி வழங்குகின்ற திட்டத்திற்கு ''அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்'' என்று ஏற்கெனவே பெயர் வைத்திருக்கிறோம்.

விதவைப் பெண்களுடைய மகள் திருமணத்திற்கு உதவி வழங்கும் திட்டத்திற்கு ''ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமணத் திட்டம்'' என்று பெயர் வைத்திருக்கிறோம்.

> ‘கலப்புத் திருமணங்களை செய்துவைக்கின்ற பெண்களையும் பார்த்தேன். அனாதைக் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கின்ற பெண்களின் குழுக்களைப் பார்த்தேன். இவைகளெல்லாம் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பெரிய சமுதாயம் மாறுதலுக்கான அடையாளம்.’

கருவுற்ற ஏழைத் தாய்மார்கள் சத்துணவு உட்கொள்ள பேறு காலத்துக்கு முன் இரு மாதங்களுக்கும், பின் இரு மாதங்களுக்குமாக நான்கு மாதங்களுக்கு மொத்தமாக 500 ரூபாய் நிதி வழங்கும் திட்டத்திற்கு ''டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறுத் திட்டம்'' என்று பெயர் வைத்திருக்கிறோம். முத்துலெட்சுமி ரெட்டி ஒரு சமுதாய சிந்தனையாளர். பெண்களுக்காக புரட்சிகள் பல செய்தவர். அவருடைய பெயரை அதற்கு வைத்திருக்கிறோம்.

பட்டப்படிப்பு வரை ஏழை மாணவிகளுக்கு இலவசக் கல்வி வழங்கும் திட்டம் அதற்கு பெரியாருடைய துணைவியார் ''ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம்'' என்ற பெயரை வைத்திருக்கிறோம்.

4 திட்டங்களுக்குப் புதிய பெயர்கள்

இப்பொழுது நான்கு திட்டங்களுடைய பெயரை சற்குணம் என்னிடத்திலே கொடுத்து அதற்குப் பெயர் சூட்டுங்கள் என்று கேட்டிருக்கிறார்.

அதில் ஒன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாடு நிறுவனத் திட்டம். அதற்கு இந்த நாளில் நான் சூட்டுகின்ற பெயர், அண்ணாவை ஈன்று நமக்குத் தந்த அன்னை, ''பங்காரு அம்மையார் நினைவுத் திட்டம்'' என்று பெயர் சூட்டுகின்றேன்.

இன்னொன்று பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். அதற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களை ஈன்று வழங்கிய அன்னை, ''சிவகாமி அம்மையார் நினைவுத் திட்டம்'' என்று பெயர் சூட்டுகிறேன்.

இன்னொரு திட்டம் 'அரசு குழந்தைகள் காப்பகம்'. அதற்குப் பெயர் எம்.ஜி.ஆர். அவர்களை ஈன்றளித்த அன்னை, ''சத்தியா அம்மையார் நினைவுத் திட்டம்'' என்று பெயர் சூட்டுகிறேன்.

மகளிர் இலவச தையல் எந்திரங்கள் வழங்கும் திட்டத்திற்கு அண்மையில் மறைந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக மாத்திரமல்ல, மகளிர் குலத்திற்கு பெரும்பாடுபட்ட - பெரும் பணியாற்றிய அன்னை சத்தியவாணிமுத்து பெயரால் - ''சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் எந்திரம் வழங்கும் திட்டம்'' என்று பெயர் சூட்டுகிறேன்.

இந்தத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று வாழ்த்தி, இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கின்ற அருமைத் தாய்மார்களுக்கும், அன்புச் சகோதரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து சாதி சமயமற்ற சமுதாயத்தைக் காண, பொருளாதாரத்திலே தாழ்வற்ற சமுதாயத்தைக் காண, முற்போக்கான சமுதாயத்தைக் காண, மூட நம்பிக்கை ஒழிந்த சமுதாயத்தைக் காண அனைவரும் ஒன்று திரள்வோம் என்று கூறி விடை பெறுகிறேன்.

*- உலக மகளிர் நாள் விழாவில் 9-3-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

# பெண்ணுரிமையும் பெண்ணின் பெருமையும்

– மகாத்மா காந்தி

பழக்க வழக்கங்களும் சட்டங்களும் பெண்ணை அடக்கி வைக்கவே வந்திருக்கின்றன; பழக்க வழக்கங்களும் சட்டங்களும் ஆடவன் வகுத்தவையேயன்றி பெண் வகுத்தவையல்ல. அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையில் ஆடவன் தன் வாழ்க்கையை நிர்ணயிப்பதற்கு என்ன உரிமையிருக்கிறதோ, அதே உரிமை பெண்ணுக்கும் அவள் வாழ்க்கையை நிர்ணயிப்பதில் இருக்கவேண்டும்.

✧ ✧ ✧

ஆடவர்களுக்குத் தாங்கள் அடிமைகளே என்று கருதும்படிதான் பெண்களை நாம் பயிற்றி வந்திருக்கிறோம். பெண்கள் தங்கள் பூரணமான தகுதி என்னவென்பதை உணர்ந்து ஆடவரோடு சமமாகக் கலந்து வேலை செய்ய வல்லவர்களாகும்படி செய்வது - செய்ய வேண்டிய பெரும் பணியாகும்.

✧ ✧ ✧

ஆடவர் தங்கள் மனைவியரை வெறும் பதுமைகளாக வைத்துக் கொஞ்சிக் குலவினால் போதாது. பொதுவான சேவையில் உடன் உழைக்கிற தோழரைப் போலக் கௌரவமாக அவர்களை நடத்த வேண்டும். இதன் பொருட்டுப் பள்ளிக்கூடம் சென்று அதிகம் படித்திராத பெண்களுக்கு அவர்களுடைய கணவன்மார் முடிந்த அளவு கல்வி போதிக்க வேண்டும்.

✧ ✧ ✧

பெண்கள் என்றால் அவர்களிடம் இயற்கையாகவே சில குணாதிசயங்கள் இருக்கத்தான் வேண்டும் என்று நமது சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள இந்த மாசுகளை அகற்றுவதே பெண்களின் மறுமலர்ச்சிப் பணியில் நாம் செய்ய வேண்டிய மிகப்பெரிய முயற்சியாய் இருக்க வேண்டும்.

✧ ✧ ✧

ஆணின் தோழி பெண்; ஆணைப் போலவே பெண்ணுக்கும் அதே சிந்தனைத் திறன் இருக்கிறது. அடிப்படையில் ஆண்களும் பெண்களும் ஒன்றே என்று நான் நினைக்கிறேன். ஆகையால் அவர்களுடைய பிரச்சினையின் சாரமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

✧ ✧ ✧

விரும்பத் தகாதவையும், தகுதியற்றவையுமான எல்லாக் கட்டுப்பாடுகளையும் எதிர்த்துப் பெண்கள் கலகம் செய்ய வேண்டும். கட்டுப்பாடுகள் பலனளிக்கத் தக்கவைகளாக இருக்க வேண்டுமென்றால் மனமுவந்து ஏற்றுக் கொள்ளப் படுபவைகளாக இருக்க வேண்டும்.

✧ ✧ ✧

கல்வி அறிவில்லாத மனிதப் பிறவிக்கும், மிருகத்திற்கும் அதிக வித்தியாசமில்லை என்று கூறுவது மிகையாகாது. ஆகையால் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் கல்வி அவசியமாகும்.

✧ ✧ ✧





பெண்களின் (வாரிசு) உரிமைகளைப் பற்றிய விஷயத்தில் நான் கொஞ்சமும் விட்டுக் கொடுக்க மாட்டேன். ஆண்களுக்கில்லாத சட்டபூர்வமான நிர்ப்பந்தம் எதுவும் பெண்களுக்கு இருக்கக் கூடாது என்பதே என்னுடைய அபிப்பிராயம். பெண்கள், பிள்ளைகள் இருவருக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கப்படுவதையே நான் விரும்புகிறேன்.

✧ ✧ ✧

சமூகக் கொடுமைகளை அல்லது இதரக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் பயிற்சி அளிக்கத் தவறும் ஒரு கல்வி முறையில் ஏதோ ஒரு பெரிய தவறு இருக்கத்தான் வேண்டும்.

✧ ✧ ✧

ஆண் குழந்தை பெண் குழந்தை என்று பாகுபாடு காட்டுவது எவ்வளவு அர்த்தமற்ற கொடுமை என்பதைச் சமூகம் என்றைக்காவது உணரத்தான் செய்யும் என்ற உறுதியுடன், வேலை செய்ய வேண்டும்.

✧ ✧ ✧

நான் ஒரு பெண்ணாய்ப் பிறந்திருந்தால், தன்னுடைய விளையாட்டுக் கருவியாக இருப்பதற்காகத் தான் பெண் பிறந்திருக்கிறாள் என்று ஆண்கள் வேஷம் போடுவதை நான் எதிர்த்துப் போராடுவேன்.

✧ ✧ ✧

பெண்களின் அங்க அமைப்புகளை நுட்பமாக விவரிப்பது இலக்கியத்தின் அத்தியாவசியமான அம்சமா என்று எனக்குப் புரியவில்லை.

✧ ✧ ✧

ஒரு பெண் தாக்கப்படும் போது ஹிம்சை, அஹிம்சை என்றெல்லாம் அவள் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு எந்த வழியும் அவளுக்குத் தோன்றும். எந்த வழியையும் பின்பற்ற அவளுக்கு உரிமையுண்டு.

✧ ✧ ✧

பலவந்தமாகக் கடத்தப்பட்ட பெண்கள் ஒரு குற்றத்தையும் செய்யவில்லை என்பதிலும், அவர்களுக்கு ஒரு மாசும் ஏற்படவில்லை என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. நியாய புத்தி உள்ள ஒவ்வொரு மனிதனின் இரக்கத்திற்கும், தீவிரமான உதவிக்கும் அவர்கள் உரியவர்கள். அத்தகைய பெண்களைக் குடும்பங்கள் மனப்பூர்வமாகவும், வாஞ்சையுடனும் வரவேற்க வேண்டும்.

✧ ✧ ✧

அகிம்சைப் போராட்டத்தில், ஆண்களின் பங்கைவிடப் பெண்களின் பங்கு அதிகமானதாக இருக்க வேண்டும்.... தார்மிக சக்தி தான் பலமென்றால், பெண்கள் ஆண்களை விட எவ்வளவோ உயர்ந்தவர்கள்.

✧ ✧ ✧

அகிம்சையின் அவதாரம் பெண்.... அளவில்லாத அன்பு என்பதே அகிம்சையின் பொருள். அத்துடன் எந்தக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ளுவதும் அதனுடைய விசேஷமாகும். மனிதனை ஈன்றெடுக்கும் அன்னையாகிய பெண்ணைத் தவிர வேறு யாருக்கும் இந்தச் சக்தி அவ்வளவு அதிகமாக இருக்கிறது? ....

✧ ✧ ✧

தியாகத்தின் உருவாகப் பெண்கள் அமைந்திருக்கிறார்கள். பெண்கள் சரியான உணர்ச்சியுடன் ஒரு காரியத்தில் இறங்கினால், மலைகளைக் கூட அவர்கள் நகர்த்தி விடுகிறார்கள், பெண்களை மெல்லியலார் என்று கூறுவது அவர்களை அவதூறு செய்வதாகும். இது ஆண்கள் பெண்களுக்கு இழைக்கும் அநீதியுமாகும். ✧

# பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்

## பண்ணை மகளிர் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட மகத்தான ஒரு திட்டம்

### வேளாண்மையில் பெண்கள் பங்கு

வேளாண்மை உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். வேளாண்மை பணிகளில் சுமார் **60%** க்கும் மேலாக பெண்களின் பங்கு உள்ளது. நடவு செய்தல், களையெடுத்தல், அறுவடை செய்தல், தானியங்களைத் தூற்றிச் சுத்தம் செய்தல், ஏர் உழவு செய்தல், தண்ணீர் கட்டுதல், உரமிடுதல் போன்ற பல பணிகளையும் கூட பெண்கள் செய்வதை நாம் பார்க்கின்றோம். சில மாவட்டங்களில் டிராக்டர் உழவு செய்யும் பண்ணை மகளிரையும் நாம் காணலாம்.

தமிழகத்தில் விவசாய முன்னேற்றம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளின் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இதை மனதில் கொண்டுதான் வேளாண்மையில் முக்கிய பங்கு வகிக்கும் சிறு மற்றும் மிகச்சிறு பண்ணை மகளிரின் மேம்பாட்டுக்காக தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் 1986ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### பண்ணை மகளிர் தேர்வு

பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கும் பண்ணை மகளிர் கீழ்க்கண்ட தகுதி அடிப்படையில் டான்வா (TANWA-Tamil Nadu Women in Agriculture) பெண் வேளாண்மை அலுவலர்களால் தேர்வுச் செய்யப்படுகின்றனர்.

★ திருமணமானவராக இருக்க வேண்டும்

★ 20–45 வயது

★ குறைந்தபட்சம் 1 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்

★ சிறு அல்லது மிகச்சிறு விவசாயியாக இருக்க வேண்டும்

★ தான் கற்றதை மற்ற பெண் விவசாயிகளுக்கும் கற்றுத் தரும் தகுதி உள்ளவராக இருக்க வேண்டும்

★ தலைமைப் பண்பு உள்ளவராக இருக்க வேண்டும்

### டான்வா என்றால் ...

★ பண்ணை மகளிர் பயிற்சி

★ டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன்

★ பகுதி I – ரூ. 4 கோடியில் செயலாக்கம் (1986–1993 வரை).

★ பகுதி II – ரூ. 33.92 கோடியில் செயலாக்கம் (1994–2002 வரை).

### திட்ட நோக்கம்

★ சிறு/மிகச்சிறு பண்ணை மகளிருக்கு வேளாண் தொழில் நுட்ப பயிற்சி அளித்தல்.

★ இதர சகபண்ணை மகளிருக்குத் தொழில்நுட்ப பயிற்சி அளித்தல்

★ பண்ணை மகளிரின் சமூக/பொருளாதார நிலையை உயர்த்துதல்

★ உணவு உற்பத்திக்கு உத்திரவாதம்

## திட்ட செயல்பாடுகள்

### கிராம அளவிலான பயிற்சி

| | |
|---|---|
| நோக்கம் | : கிராம அளவில் வேளாண் தொழில் நுட்பங்களை செயல் விளக்கங்கள் மூலம் பயிற்றுவித்து தனித்தனியே பழக்கப் படுத்திக் கொள்ள பயிற்சி அளித்தல் |
| பயிற்சிப் பெறுபவர் | : 25 மகளிர் / உதவி வேளாண்மை அலுவலர் தொகுதி |
| பயிற்சிக் காலம் | : 5 நாட்கள் |
| பயிற்சியாளர் | : வேளாண் அலுவலர் (டான்வா) |





**பண்ணை மகளிர் கருத்தரங்கு**

நோக்கம் : பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் சந்தித்து அவரவர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் சுயஉதவிக் குழு அமைக்கவும் வழி வகை செய்தல்

கலந்து கொள்வோர் : 50–75 டான்வா மகளிர், வேளாண் விஞ்ஞானிகள், முன்னோடி வங்கி அலுவலர், இதர துறை அலுவலர்கள்

பயிற்சிக் காலம் : 2 நாள்

**குழு அமைத்தல் பயிற்சி**

நோக்கம் : டான்வா சுயஉதவிக் குழுக்கள் அமைத்திட பண்ணை மகளிரை ஊக்குவித்தல்

பயிற்சி பெறுபவர் : 20 மகளிர்

பயிற்சிக் காலம் : 2 நாட்கள்

பயிற்சியாளர் : திட்ட வெளி ஆலோசகர், வேளாண் அலுவலர் (தொடர்பணி)

**மாவட்ட பண்ணை மகளிர் குழு ஒருங்கிணைப்பு கருத்தரங்கு**

நோக்கம் : குழுக்கள் சுயமாகத் தொழில் தொடங்கு வதற்கான வாய்ப்பை உருவாக்கவும், குழுக்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் வழிவகை செய்தல்

கலந்து கொள்வோர் : 50 மகளிர் / 10 குழுக்களின் உறுப்பினர்கள்

பயிற்சிக் காலம் : 1 நாள்

**சிறப்புப் பயிற்சி**

நோக்கம் : ஆண்டு முழுவதும் வருமானம் கிடைத்திட வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடைத் துறை, தோட்டக்கலைத் துறை, காளான் வளர்ப்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்

பயிற்சிப் பெறுபவர் : 26 பயிற்சிப் பெற்ற மகளிர்

பயிற்சிக் காலம் : 4 நாட்கள்

பயிற்றுவிப்பவர் : வேளாண்மை அலுவலர் (ப.ம.ஒ.), சம்மந்தப்பட்ட துறை வல்லுநர்கள்

**மாதிரிப் பண்ணை**

நோக்கம் : ஒருங்கிணைந்த பண்ணை யத்தை அடிப்படையாகக் கொண்டு பயிர் சாகுபடியுடன் பழமரங்கள், மலர் மற்றும் காய்கறி சாகுபடி, கறவைமாடு, ஆடு வளர்ப்பு போன்ற சார்பு தொழில்களில் ஊக்குவித்து பண்ணை மகளிரின் வயலில் மாதிரிப் பண்ணை அமைத்தல்.

**பன்மடங்கு பெருக்குப் பயிற்சி**

நோக்கம் : வேளாண் தொழில்நுட்பங்கள் எளிதில் கிராமங்களில் பரவ, டான்வா மகளிரைக் கொண்டு சக பண்ணை மகளிருக்கு கற்று தந்து, டான்வா குழுக்கள் அமைத்திட ஊக்கமளித்தல்.






பயிற்சி : **25** மகளிர் கொண்ட **5** குழுக்கள் / உதவி வேளாண்மை அலுவலர் தொகுதி.

பயிற்சிக் காலம் : **5** நாட்கள்

பயிற்சியாளர் : தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறும் திறன் வாய்ந்த டான்வா மகளிர், தொடர்பு தலைவி, வேளாண் அலுவலர் (டான்வா).

**பருவக்கால பயிற்சி**

நோக்கம் : கிராம அளவில் பருவத்திற் கேற்ற பல புதிய தொழில் நுட்பங்களை செயல் விளக்கங்கள் மூலம் நினைவூட்டுதல்.

பயிற்சிப் பெறுபவர் : டான்வாத் திட்டத்தில் பயிற்சி பெற்ற மகளிர்/ இதர பண்ணை மகளிர்.

பயிற்சிக் காலம் : **2** நாட்கள்

பயிற்சியாளர் : வேளாண் அலுவலர் (தொடர்பணி)

## டான்வா பண்ணை மகளிர் குழு

**ஏன்?**

★ வறுமை நிலை

★ சேமிப்பு பழக்கம் இல்லாமை

★ நிரந்தர வருமானம் இல்லாமை

★ அவசர தேவைக்கு அதிக வட்டிக்கு கடன் பெறுதல்

★ குறைந்த தொழில்நுட்ப அறிவு

★ போதிய சமூக நிலை கிடைக்காது இருத்தல்.

**உறுப்பினர்கள் தகுதி**

★ டான்வா பண்ணை மகளிர்

★ இதர சிறு / குறு பண்ணை மகளிர்

★ திருமணமான மகளிர் **20—45** வயதிற்குள்

★ மொத்த உறுப்பினர்கள் **20** நபர்கள்

★ உறுப்பினர்களுக்குள் ஒருமித்த கருத்து

★ ஒரே கிராமத்தில் வசிப்பவர்கள்

**குழுக் கூட்டம் நடத்தும் முறை**

★ ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் நடத்துதல்

★ அனைத்து முடிவுகளும், பெரும்பாலான உறுப்பினர்களின் ஒப்புதலுடன் எடுக்கப்படுதல்.

**குழுவின் பணிகள்**

★ மாதக் கூட்டம் நடத்துதல்

★ நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல், (தலைவி, உபதலைவி, பொருளாளர், செயலாளர்)

★ சிறுசேமிப்பு செய்தல்

★ குழு உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்தல்

★ கடன் வசூல் செய்தல்

★ வேளாண்மை, வேளாண்மை சார்ந்த உபதொழில்கள் மற்றும் பிற தொழில்கள் மூலம் வருவாய் உயர நடவடிக்கை எடுத்தல்.

## திட்ட சாதனைகள்

★ டான்வா திட்டத்தின் மூலம் **215** பெண் வேளாண் பட்டதாரிகள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.






★ 66,020 சிறு/மிகச்சிறு பண்ணை மகளிர் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ளனர்.

★ இதில் 19,800 தாழ்த்தப்பட்டப் பழங்குடி பண்ணை மகளிர்.

★ பயிற்சிப் பெற்ற மகளிர் மூலம் 5,00,000 சக பண்ணை மகளிர், வேளாண் தொழில்நுட்ப அறிவை பெற்றுள்ளனர்.

★ பயிற்சிப் பெற்றவர்களில் 1,800 மகளிர் ஊராட்சி அமைப்புகளில் பெண் உறுப்பினர்கள்.

★ 800 டான்வா பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

★ சிறு/மிகச்சிறு பண்ணையில் வேளாண் உற்பத்தி திறன் 14 சதவிகிதத்திலிருந்து அதிகபட்சமாக 80 சதவிகித உயர்வு.

★ பண்ணை மகளிர் கழனியில் மாதிரிப் பண்ணைகள்.

★ 400 தொடர்பு தலைவிகள் சகபண்ணை மகளிருக்கும் வேளாண் துறைக்கும் பாலமாக செயல்படுகின்றனர்.

★ பயிற்சிப் பெற்ற பண்ணை மகளிர் விரிவாக்கத்தில் தொடர்பு விவசாயிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ வேளாண் விரிவாக்க மையங்களில் இடுபொருட்களை எளிதில் பெற அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

★ சாகுபடி இல்லாக் காலங்களில் தொடர் வருமானம் பெற வேளாண் சார்ந்த உபதொழில் சிறப்புப் பயிற்சி.

★ டான்வா மகளிர் தங்கள் வேளாண் விளைபொருட்களை உழவர் சந்தையில் விற்று நேரடி இலாபம் அடைதல்.

★ பண்ணை மகளிர் குழுவினர் சமுதாய பணிகளில் ஈடுபாடு.

★ பண்ணை மகளிரின் தன்னம்பிக்கை உயர்வு.

## ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம்

**நோக்கம் :**

★ பயிர் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர, உபதொழில்கள் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கும்.

★ இயற்கை சீற்றத்தால் பயிர் வருமானம் குறைந்தால், உபதொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானம் இதை ஈடுசெய்ய உதவும்.

★ பயிர் சாகுபடி இல்லாத பருவத்திலும், உபதொழில்கள் மூலம் தொடர்ந்து வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மாதிரி வழி முறைகள் :**

ஒரு ஏக்கர் நிலப்பரப்பில், ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம் கடைப்பிடிக்கக் கூடிய சில வழிமுறைகள் :

**வழிமுறை–1 :**

☐ பயிர் – 80 சென்ட்

☐ தீவனப்பயிர் – 10 சென்ட்

☐ பழமரங்கள் – 10 சென்ட்

இவற்றுடன் கறவை மாடுகள் வளர்ப்பு.

**வழிமுறை–2 :**

☐ பயிர் – 50 சென்ட்

☐ காய்கறி – 20 சென்ட்



□ மரங்கள் /
பழமரங்கள் — 13 சென்ட்

□ மழைநீர் குட்டை — 2 சென்ட்
(பண்ணை குட்டை)

□ தீவனப்பயிர் — 5 சென்ட்

□ பழமரங்கள் — 10 சென்ட்

இவற்றுடன் கறவை மாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு.

**வழிமுறை—3 :**

□ பயிர் — 50 சென்ட்

□ மரங்கள்/
பழமரங்கள் — 25 சென்ட்

□ மலர்கள் — 20 சென்ட்

□ தீவனப்பயிர் — 5 சென்ட்

இவற்றுடன் கறவை மாடு, வெள்ளாடு வளர்ப்பு மற்றும் தேனி வளர்ப்பு.

**கவனிக்க வேண்டியவை :**

★ கால்நடை வளர்த்தால், கோ—*1*, கோ—*2*, கோ—*3*, களிபுல் அல்லது கொழுக்கட்டை புல் போன்ற தீவனப் பயிர்களையும், வருடாந்திர தீவனப்பயிர்களான சோளம், மக்காச் சோளம், கம்பு ஆகியவற்றையும் சாகுபடி செய்ய வேண்டும்.

★ முருங்கை, அகத்தி, சுபாபுல் போன்ற தீவன மரங்களை வரப்பில் வளர்க்கலாம்.

## விட்டுக் காய்கறித் தோட்டம்

| காய்களின் பெயர் | பருவம் |
|---|---|
| தக்காளி மற்றும் வெங்காயம் | ஜூன்—செப்டம்பர் |
| முள்ளங்கி | அக்டோபர்—நவம்பர் |
| பீன்ஸ் | அக்டோபர்—பிப்ரவரி |
| வெண்டை | ஜனவரி—மே |
| கத்தரி | ஜூன்—செப்டம்பர் |
| கீரை | மே |
| மிளகாய் மற்றும் முள்ளங்கி | ஜூன்—செப்டம்பர் |
| தட்டைப் பயிர் | டிசம்பர்—பிப்ரவரி |
| பெரிய வெங்காயம் | மார்ச்—ஆகஸ்ட் |
| வெண்டை மற்றும் முள்ளங்கி | ஜூன்—ஆகஸ்ட் |
| முட்டை கோசு | செப்டம்பர்—டிசம்பர் |
| கொத்தவரை | ஜனவரி—மார்ச் |
| பீட்ருட் | செப்டம்பர்—நவம்பர் |
| தக்காளி | டிசம்பர்—மார்ச் |
| வெங்காயம் | ஏப்ரல்—மே |
| கொத்தவரை | ஜூன்—செப்டம்பர் |
| கத்தரி மற்றும் பீட்ருட் | அக்டோபர்—ஜனவரி |
| டின்டா | பிப்ரவரி—மே |
| கேரட் | செப்டம்பர்—டிசம்பர் |
| பூசணி | ஜனவரி—மே |
| வெங்காயம் | செப்டம்பர்—டிசம்பர் |
| அவரை | ஜூன்—ஆகஸ்ட் |
| மல்லி | ஏப்ரல்—மே |



## பல பருவத் தாவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| முருங்கை | ஒரு வரிசை | | |
| வாழை | ஐந்து வரிசை | தவசிக்கீரை | ஒரு வரிசை |
| பப்பாளி | ஐந்து வரிசை | செர்ரிப் பழம் | இரண்டு வரிசை |
| மரவள்ளி | இரண்டு வரிசை | அகத்தி | ஒரு வரிசை |
| கறிவேப்பிலை | ஒரு வரிசை | அரநெல்லி | ஒரு வரிசை |

## பழப்பயிர்கள் சாகுபடி குறிப்புகள்

| வ. எண் | பயிர் | ரகங்கள் | சாகுபடி பருவ காலம் | குழி அளவு மீட்டரில் | இடைவெளி மீட்டரில் | 1 எக்டேருக்கு தேவைப்படும் செடிகள் | உர சிபாரிசு(வளர்ந்த மரங்களுக்கு) மரம் 1க்கு தழைமணி சாம்பல் | மகசூல் (எக்டேருக்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மா | நீலம், பி.கே.எம்1 பெங்களூரா களப்பாடு பங்கனப்பள்ளி | ஜூலை முதல் டிசம்பர் வரை | 1x1x1 | 10x10 | 100 | 1:1:1.5 கிலோ/மரம் | 15–20 டன் |
| 2. | எலுமிச்சை | பி.கே.எம்.1 | ஜூன் முதல் டிசம்பர் வரை | 0.75x0.75 x0.75 | 5–6x5–6 | 275 முதல் 400 வரை | 0.6:0.2:0.3 கிலோ/மரம் | 25 டன் |
| 3. | கொய்யா | அலகாபாத், பனாரசி, லக்னோ–49 | ஜூன் முதல் நவம்பர் வரை | 0.45x0.45 x0.45 | 5–6x5–6 | 275 முதல் 400 வரை | 1:1:1 கிலோ/மரம் | 25 டன் |
| 4. | சப்போட்டா | ஓவல், கீர்த்தபர்த்தி கோ–1, கோ–2 பி.கே.எம்.1,2,3 | ஜூன் முதல் நவம்பர் வரை | 1x1x1 | 9–10x9–10 | 100 முதல் 110 வரை | 1:1:1.5 கிலோ/மரம் | 12–25 டன் |
| 5. | மாதுளை | கணேஷ், கோ1 ஏற்காடு 1 | ஜூன் முதல் டிசம்பர் வரை | 0.6x0.6 x0.6 | 2.5–3.0 x2.5–3.0 | 1100 முதல் 1600 வரை | 0.6:0.5:1.2 கிலோ/மரம் | 20–25 டன் |
| 6. | நெல்லி | பனாரசி | ஜூன் முதல் டிசம்பர் வரை | 1x1x1 | 9x9 | 110 | 0.2:0.5:0.2 கிலோ/மரம் | 5–10 டன் |

## ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு

**நோக்கம்**

★ வளமான பயிரை நலமான சூழலில் வளர்த்தல்.

★ நன்மை தரும் பூச்சிகளை பாதுகாத்து பெருக்குதல்.

★ பயிரை தொடர் கண்காணிப்பில் வைத்தல்.

★ தங்கள் வயலுக்கு தாங்களே நிபுணர்கள் என விவசாயிகளை ஆக்குதல்.

★ சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, காற்றையும், நீரையும், உணவையும் நஞ்சாக்காமல் இருத்தல்.

## ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள்

**உழவியல் முறை**

★ பூச்சி, நோய்களை எதிர்க்கும் சக்தி உள்ள ரகங்களை பயிரிடுதல்

★ கோடை உழவு

★ ஒரே சமயத்தில் விதைப்பு

★ பொறிப்பயிர்களை வளர்த்தல்

★ சரியான இடைவெளியில் நடுதல்

★ பயிர் சுழற்சி

★ நீர் நிர்வாகம் மற்றும் உர நிர்வாகம்

**பூச்சி நோய் கண்காணிப்பு**


★ விளக்குப் பொறி மற்றும் இனக்கவர்ச்சிப் பொறிவைத்து கண்காணித்தல்.

**உயிரியல் முறை**

★ நன்மை செய்யும் பூச்சிகள், ஒட்டுண்ணிகள் கொண்டு பயிரைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துதல்

★ இயற்கைப் பூச்சி நாசினிகளான வேப்பெண்ணை, புகையிலைச்சாறு கொண்டு கட்டுப்படுத்துதல்

★ பயிரைத் தாக்கும் பூச்சிகளின் முட்டைக் குவியல் மற்றும் புழுக்களை பொறுக்கி அழித்தல்.



**சமூக ஒத்துழைப்பு**

★ அனைத்து விவசாயிகளும் ஒன்றி செயல்பட்டு பூச்சிகளை கட்டுப்படுத்துதல்

(உ—ம்) நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப்பூச்சி அழிப்பு, எலி ஒழிப்பு

**கவனிக்க வேண்டியவை**

அனைத்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தும், பூச்சி தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால், சரியான பூச்சிக்கொல்லி மருந்தை, பரிந்துரைக்கப்பட்ட அளவில் உபயோகிக்க வேண்டும்.

## குழுவினரால் நன்மைகள்

★ சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கப்படுகிறது.

★ குழு உறுப்பினர்களின் பொருளாதார அவசர தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

★ வருடம் முழுவதும் நிரந்தர வருமானம் கிடைக்கிறது.

★ சமூக, பொருளாதார நிலை உயர்த்தப்படுகிறது.

★ வயதான காலத்தில் சேமநல நிதிபோல உதவுகிறது.

## வங்கியில் டான்வா குழுவின் நடவடிக்கைகள்

★ அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் கணக்கு தொடங்குதல்.

★ வங்கியின் நம்பிக்கை பெற்ற உடன் தொழில் தொடங்க கடன் பெறுதல்.

★ குறிப்பிட்ட காலத்தில் கடனை திருப்பி செலுத்துதல்.

***"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"***

— என்ற பாரதியின் கூற்றை நினைவாக்கும் வகையில் டான்வா திட்டத்தின் மூலம் பண்ணை மகளிர் பெற்றுவரும் வெற்றியையும் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளதையும் காணும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. ★



நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!

**– மகாகவி பாரதியார்**

# தூய்மை சென்னை 2000

**ஆலோசனை கூறிய, உறுதுணையாக இருந்த, ஒத்துழைத்த, நிறைவேற்றிய அனைவருக்கும் நன்றி**

இந்தியாவிலேயே முதல் தடவையாக சென்னை மாநகரத்திலே இந்த நவீன தூய்மைத் திட்டத் தொடக்க விழா இன்று நடைபெறுகின்றது. இந்தியாவிலேயே முதலாவதாகத் தொடங்கப்பட்ட பல திட்டங்களில் ஒன்றாக இன்றைக்கு இந்தத் தூய்மைத் திட்டமும் தொடங்கப்படுகின்றது. இதைத் தொடங்குகிற நேரத்தில் நவீன முறையிலே ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 12 கோடி ரூபாய் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு மிச்சம் ஏற்படுகின்ற வகையிலே இந்தத் திட்டம் நடைபெற்றாலுங் கூட, இதற்கு உதவிட வேண்டிய பெரும் பொறுப்பு மாநகராட்சி மன்றத்திலே வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் உள்ளது என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஏனென்றால் மக்கள் ஒத்துழைத்தால்தான் எந்தத் திட்டமும் நல்ல முறையிலே நிறைவேற முடியும். இந்தத் திட்டத்தை அறிந்துகொள்ள, இதைத் தங்கள் நகரங்களிலே அறிமுகப்படுத்த புனாவிலிருந்தும், விஜயவாடாவிலிருந்தும் வருகின்ற அளவிற்குத் திட்டத் தொடக்கத்திலேயே சென்னை மாநகரம் மாநகரங்களுக்கெல்லாம், இந்தியாவிலே உள்ள மற்ற நகரங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையிலே அமைந்திருக்கிறதென்றால் இந்தத் திட்டத்தை இங்கே தொடங்குவதற்கு முதலிலே ஆலோசனை கூறிய தம்பி முரசொலி மாறனுக்கும், அந்த ஆலோசனைக்கு உறுதுணையாக இருந்த முன்னாள் மாநகராட்சி ஆணையர் கோலப்பனுக்கும், ஒத்துழைத்து தொடர்ந்து உதவிகரமாக இருந்த நண்பர் டிட்கோ



கோபாலனுக்கும், இதை நிறைவேற்றுவதிலே முனைப்பாக இருந்து நிறைவேற்றிக் காட்டியுள்ள மேயர் தம்பி மு.க.ஸ்டாலினுக்கும் உங்கள் அனைவர் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் பாராட்டப்பட வேண்டிய திட்டங்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். ஆனால் எந்தத் திட்டம் எல்லோராலும் போற்றப்படுகின்ற, புகழப்படுகின்ற திட்டமாக இருந்தாலும், அதைப் பழித்துப் பேசுகின்ற, இழித்துப் பேசுகின்ற, அதற்கு ஏதாவது குதர்க்கம் சொல்லுகின்ற சிலர் இருக்கத்தான் செய்வார்கள். வீட்டிலே குப்பை இருப்பதைப் போல, தெருவிலே புழுதி இருப்பதைப் போல, நாட்டிலே அப்படிப்பட்ட சக்திகள், இருக்கத்தான் செய்கின்றன. அவைகளையெல்லாம் கூட்டி ஒதுக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் தினம் தினம் இப்படி ஒதுக்கினால் போதாது, நவீன முறையிலே ஒதுக்க வேண்டுமென்ற வகையில் இன்றைக்கு தம்பி ஸ்டாலின் இந்தத் திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

குப்பை என்பது ஒரு கேவலமான சொல், ஆனால் அந்தக் குப்பையை அகற்றுவதற்காக தமிழர் திருநாளையொட்டிய ஒரு நாளையே தமிழர்கள் போகிப் பண்டிகை என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அன்றைக்குத் தான் அசுத்தங்களை, அழுக்குகளை, குப்பைகளையெல்லாம் அகற்ற வேண்டுமென்பதற்காக, தமிழன் குப்பையைச் சகித்துக்கொள்ள மாட்டான் என்பதற்கு அடையாளமாக அதற்கு ஒரு திருநாளையே கொண்டாடிக் கொண்டிருக்கின்றான்.

ஆனால் திருநாளோடு அது முடிந்துவிடக் கூடிய காரியமாக இருக்கக் கூடாது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நாம் நடத்தி, நடைமுறையிலே செயல்படுத்த வேண்டிய காரியமாக இந்தக் குப்பை அகற்றுகின்ற காரியத்தை நாம் செய்தாக வேண்டும்.

வெளிநாடுகளிலே எந்த அளவிற்கு அந்த நகரங்கள், ஊர்கள் தூய்மையாக இருக்கின்றன என்பதை நான் நேரிலே பார்த்தவன் என்ற முறையில், சென்னை போன்ற நகரங்களைக் காணும் போதெல்லாம் அந்த நகரங்களின் நினைப்பு எனக்கு வருவதுண்டு. அந்த நகரங்களைப் போல சென்னை ஆகாதா என்கிற நினைப்பு தோன்றுவதுண்டு.


ஒரு சிறு துண்டுத் தாள் நம்முடைய கையிலிருந்து கீழே விழுந்தாலும் நாம் துண்டுத் தாளைத் தானே கீழே போட்டோம் என்று நாம் எண்ணிக் கொள்கிறோம். நம்மைப் போல பல இலட்சம் மக்கள் ஆளுக்கொரு துண்டுத் தாளை, கிழிந்த தாளை அல்லது ஒரு அழுக்குத் துணியை அல்லது ஒரு அழுக்குத் தாளைத் தெருவிலே போட்டு விட்டுப்போனால் அதுதான் தம்பி ஸ்டாலின் தன் பேச்சிலே குறிப்பிட்ட 1,800 டன், 2,500 டன் குப்பை என்றாகிறது.

**நோய்கள் வராமல் தடுக்க இந்தத் தூய்மைப் பணி**

அந்தக் குப்பையை டன் கணக்கிலே நாம் கூட்டிப் பெருக்கிக் குவித்துப் பார்க்கும் போது உருவாகின்ற டன் கணக்கான குப்பைகளையெல்லாம் அகற்றினால் தூய்மை ஏற்படுவது மாத்திரமல்ல, பார்ப்பதற்கு பாதைகள், வீதிகள், தெருக்கள் எல்லாம் அழகாக இருக்கும் என்பது மாத்திரமல்ல, நோய்கள் வராமல் தடுக்கக் கூடிய சாதனமாகவும் இந்தத் தூய்மைப் பணி அமைகின்றது. அதற்கேற்ற வகையிலே தான் இந்தத் திட்டம் இங்கே இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கிறது.




இன்றைக்கு சென்னை மாநகரத்திலே இந்தப் பணியிலே ஏறத்தாழ பத்தாயிரம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். நான் இந்தத் திட்டம் வரும்போது பத்தாயிரம் பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய பணிக்கு ஏதாவது இதன் மூலமாக ஆபத்து வருமா என்று தம்பி ஸ்டாலினிடம் கேட்ட போது, "யாருடைய பணிக்கும் ஆபத்து வராது,



இது இப்போது தொடக்கமாக மூன்று மண்டலங்களிலே தான் நாங்கள் நடத்தவிருக்கிறோம், இந்த மண்டலங்களிலே உள்ளவர்களும் இந்தப் பணியிலே ஈடுபடலாம் அல்லது அடுத்த மண்டலங்களிலே சென்று அங்கேயுள்ள பணியிலே ஈடுபடுவதற்கு வழிவகைகள் இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

## தூய்மைப் பணித் திட்டம் ஒரு சமுதாயப் புரட்சித் திட்டம்

தம்பி மாறன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல புதிய பணி ஏறத்தாழ இரண்டாயிரம் பேருக்கு இந்த நவீன முறையின் மூலமாக கிடைத்திருக்கின்றது. அவர்களையெல்லாம் இங்கே நாம் பார்க்கிறோம். அழகான உடை அணிந்து இங்கே வீற்றிருக்கிறார்கள். அவர்கள் நாளைய தினம் குப்பையை அகற்றுவதற்காக இந்தப் பணியிலே ஈடுபடும் போது, இதற்கென்றே இதுவரை குறிப்பிடப்பட்ட ஒரு பிரிவினர் அல்லது ஒரு வகுப்பினர் எப்படி பார்க்கப்படுகிறார்களோ அப்படி பார்க்கப்படாமல் சமுதாயத்திலே அவர்களும் ஒரு அங்கம் என்ற அளவிலே பார்க்கப்படுவார்கள்.

இவர்களையெல்லாம் காணும் போது சுரங்கங்களிலே பணியாற்றுபவர்களைப் போல தோற்றமளிக்கிறார்கள். இவர்கள் குப்பை கூட்டுபவர்கள் என்பது பார்த்தவுடனே தெரிந்துவிடும். இதுவரையிலே இருந்த பழக்கம், இனிமேல் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள முடியும். இவர்கள் பணி என்ன என்பதை, அந்த அளவிற்கு இவர்கள் நாகரிக உடை அணிந்து இந்தப் பணியிலே ஈடுபடவிருக்கிறார்கள் என்கிற போது மாறன் குறிப்பிட்டதைப் போல இது ஒரு சமுதாயப் புரட்சி தான். அந்தப் புரட்சி தோன்ற வேண்டிய இடத்திலே தோன்றியிருக்கின்றது. அதைத் தோற்றுவிக்க வேண்டியவர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அப்படிப்பட்ட இந்தப் பணியை இன்றைக்கு நான் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொருவரும் தங்களுடைய கடமையை உணர்ந்து இந்தப் பணி சிறப்பதற்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கென்ன, அவர்கள் குப்பையை அள்ளிக் கொண்டு போவார்கள் என்று இருந்து விடாமல், அவர்களுக்கு நாமும் உதவிட வேண்டும். இந்த வண்டிகள் ஒவ்வொருவருடைய வீடு நோக்கி வருகிற நேரத்தில் அங்கே குவிந்த குப்பைகளையெல்லாம் அதன் மூலமாக அகற்றுகின்ற பணியிலே ஈடுபடுவதற்கு தாய்மார்கள், தோழர்கள், பெரியோர்கள் அனைவரும் ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு சென்னை நகரம் தூய்மையான நகரமாக, மேலும் தூய்மையான நகரமாக சிங்காரச் சென்னையாக மாற அனைவரும் ஒத்துழைப்பைத் தாருங்கள் என்று கேட்டு, இந்தப் பணியை நான் உங்களுடைய அன்பான ஒத்துழைப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையோடு தொடங்கி வைக்கிறேன்.

*– "தூய்மை சென்னை 2000" என்கிற சென்னை மாநகராட்சி தூய்மைத் திட்டத்தை 4–3–2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து...* ★

# மக்களின் வளர்ச்சிக்கும் வளமைக்கும் உறுதியளிக்கும் தமிழ்நாடு அரசு

– தமிழக ஆளுநர்
நீதிபதி செல்வி **மீ. பாத்திமா பீவி**

புத்தாயிரம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும் தமிழ்நாடு சட்டப் பேரவையின் இந்த முதல் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தாயிரமாண்டு மலர்ந்த நல்வேளையில், கடல்சூழ்ந்த கன்னியாகுமரி முனையில், 133 அடி உயர வானளாவிய அய்யன் திருவள்ளுவர் சிலையை நமது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திறந்து வைத்து, தமிழ்மறையாம் திருக்குறள் தந்த அந்த மாபெரும் தத்துவஞானிக்கு, உலகளாவிய புகழைக் கூட்டுவதாக அமைந்துள்ளது. மக்கள் நலன் காப்பதில் மேலும் செம்மையாகச் செயல்படுவதற்கு திருவள்ளுவரின் கருத்துரைகள் நமக்கு கலங்கரை விளக்கமாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் மறுஆய்வு செய்யும் போது, இந்திய நாட்டின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும், மதச்சார்பின்மையும், உறுதியும், வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கேற்பவும், சிறுபான்மை சமுதாய மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படவும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொண்ட சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்டதாக அரசியலமைப்புச் சட்டம் அமைய வேண்டுமென்றும் இந்த அரசு வலியுறுத்தும்.

மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசு வலியுறுத்திவரும் மொழிக் கொள்கையாகும். அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வுக் குழு இந்தக் கருத்தினை ஏற்றுக் கொள்ளும் என நம்புகிறேன்.

திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமையானதும், சிறப்புப் பெற்றதும், இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ் மொழியை முதற்கட்டமாக மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும்.

கார்கில் போரில் இந்திய வீரர்களின் தீரம் மிகுந்த தேசப்பற்றினை நாம் அனைவரும் நினைந்து மனம் கனிந்து பாராட்டுவதற்கு இதுவே தக்க தருணமாகும். தமிழக மக்கள் கார்கில் இராணுவ வீரர் நிவாரண நிதிக்கு பெருமளவில் வரிசை வரிசையாகத் தாமே முன் வந்து தாராளமாக நன்கொடை வழங்கியதால், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 50 கோடி ரூபாயை தமிழ்நாடு அளிக்க இயன்றது என்பதை இங்கே தெரிவிப்பதில் நான் பெருமையடைகிறேன்.



இந்தியத் திருநாட்டின் பாதுகாப்புக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த அந்த வீரர் தம் குடும்பத்தினர் துயர் துடைக்க இந்த அரசு அந்தக் குடும்பங்களுக்குச் சிறந்த பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. இவற்றுள் கருணை உதவித் தொகை ரூ.5 இலட்சம்; மற்றும் ரூ.7 இலட்சம் முதல் ரூ.11 இலட்சம் வரை மதிப்புள்ள அடுக்கு மாடி வீடு அல்லது தனி வீடு, இன்னுயிர் ஈந்த வீரரின் குழந்தைகளுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி, தொழில்நுட்பக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, அவர்தம் குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு தமிழ்நாடு அரசில் வேலைவாய்ப்பு ஆகியவை அடங்கும்.


கார்கில் வீரர்களுக்குப் பெருமளவில் உதவி புரிந்து நாட்டுப்பற்றை வெளிப்படுத்திய நாம், இயற்கைச் சீற்றத்தால் இன்னலுறும் மக்கள், எந்த மாநிலத்தவராக இருப்பினும், அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி நம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதிலும் முன்னணி வகிக்கிறோம். கடந்த ஆண்டு ஒரிசாவைத் தாக்கிய வரலாறு காணாத கடும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட "ஒரிசா புயல் நிவாரண நிதிக்கு" ரூ.2 கோடியே 77 இலட்சம் நிதியுதவியை அளித்து, தமிழ்நாட்டு மக்கள் தங்கள் ஆழ்ந்த பரிவுணர்வை வெளிப்படுத்தினர். புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் பொருட்டு, இந்த அரசு ஒரு கோடி ரூபாய்க்கான பால் பவுடரையும், மூன்று கோடி ரூபாய்க்கான வேட்டி சேலைகளையும், ஏனைய நிவாரணப் பொருட்களையும் அனுப்பி வைத்தது. ஒரிசா அரசு மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு கொண்டு உதவிட வேண்டி, தேவையான மருந்து பொருட்களுடன் மருத்துவர்கள் குழு ஒன்றும் அங்கு அனுப்பப்பட்டது.

மொழிவழிச் சிறுபான்மையினரின் நலனுக்குப் பாதகம் ஏதுமின்றி, "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்ற உன்னத குறிக்கோளை எய்துவதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. நீதிபதி மோகன் குழுவின் பரிந்துரைகளை இவ்வரசு ஏற்றுக் கொண்டு, அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியைக் கட்டாயமாக முதல் மொழியாகவும், ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகளுக்கு பயிற்று மொழியாகவும் ஆக்கியுள்ளது.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரியவும், தமிழ் இலக்கியங்களை மற்ற மொழிகளிலும், மற்ற மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்ப்பதை ஊக்குவிக்கவும், சாதனை படைக்கும் சிறந்த தமிழ் எழுத்தாளர்களுக்கு "குறள் பீடம்" விருது வழங்கிடவும், "தமிழ்ச் சங்கப் பலகை" (தமிழ் அகாடமி) இந்த ஆண்டு சனவரி 16 அன்று தொடங்கப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டில் "உருது அகாடமி" என்ற அமைப்பினை ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஒரு கோடி ரூபாய் தேவையென பரிந்துரைக்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

1998-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பதினோராவது நிதி ஆணையம், தனது இடைக்கால அறிக்கையை அண்மையில் மத்திய அரசிடம் அளித்துள்ளது. இறுதி அறிக்கையை இந்த ஆண்டு ஜூன் திங்கள் முடிவுக்குள் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைக்கு இந்த ஆணையம் வந்திருந்த போது, தமிழ்நாடு போன்ற முற்போக்கு மாநிலங்களுக்கு, மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதிப் பகிர்வினை அளிக்கப் பரிந்துரை செய்திட வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்தியுள்ளது. அதனை ஏற்று இந்த ஆணையம் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதிப் பகிர்வை பரிந்துரை செய்திருக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம்.



மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 29 சதவிகிதத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்திட வேண்டுமென்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தப் பிரச்சினையில் இடையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைப் போக்கி, மத்திய அரசு இதற்கான அரசியல் சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டை எய்துவதில் இந்த அரசு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது. 1998-99-ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.4500 கோடி முழுவதுமாக எய்தப்பட்டது. நிதி ஆதார இடர்ப்பாடு இருந்தபோதிலும், ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.5,250 கோடியை நாம் இந்த ஆண்டிலும் எய்திடுவோம். அடுத்த ஆண்டிலும் இந்த ஆண்டைவிட



அதிக ஒதுக்கீட்டுடன் திட்டப்பணிகள் செம்மையாக செயல்படுத்தப்படும்.

சட்டம் – ஒழுங்கைப் பராமரிப்பதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த அரசு சாதி, மத நல்லிணக்கத்தைப் பேணிக்காக்க எடுத்து வரும் தொடர் முயற்சியாலும், விஷமிகள் மீது திறம்பட எடுத்த உறுதியான நடவடிக்கைககளினாலும், அரசின் நடவடிக்கைகளுக்கு மக்கள் அளித்து வரும் இதயபூர்வமான ஆதரவின் காரணமாகவும், எங்கணும் பொதுவாக அமைதி நிலவுவதை உறுதி செய்ய முடிந்துள்ளது. கடந்த ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலை மிக அமைதியாக நடத்தியுள்ளது, இந்த அமைதி நிலைக்கு ஓர் எடுத்துக் காட்டு. தமிழகத்தை அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து திகழச் செய்வதற்கு சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதன் அவசியத்தை உணர்ந்து செயல்படும் இந்த அரசு, அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும், சமூக மறு மலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் உகந்த கொள்கைகளை வகுப்பதற்காக சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் சமூகச் சீர்திருத்தத் துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக இந்த ஆண்டு மாநிலத்தின் பல பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையின் அளவு இயல்பான அளவுக்கும் குறைவாக இருந்த போதிலும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், கரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் கடும் மழையின் காரணமாக வெள்ளச்சேதம் ஏற்பட்டது. தூர்வாருதல் போன்ற தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் பெருமளவு உயிரிழப்போ, கால்நடைகளுக்குச் சேதமோ மற்றும் உடைமைகள் இழப்போ இல்லாமல் பாதுகாக்கப்பட்டது. வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காகவும், சேதமடைந்த சாலைகள் போன்றவற்றைச் சீர் செய்யவும் இம்மாவட்டங்களுக்கு அரசு ரூ.32.25 கோடி வழங்கியுள்ளது.

இன்றியமையாப் பொருள்களின் விலைவாசியை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. பொதுவாக இம்மாநிலத்தில் கடந்த ஆண்டில் இன்றியமையாப் பொருட்களின் விலைகள் நிலையாக இருந்தன. பொது விநியோக முறையில் முன்று கிலோ அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்றும், 17 கிலோ அரிசி கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 75 பைசா என்றும் இருந்ததை மாற்றி, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் 20 கிலோ அரிசியும் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 பைசா என்று வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் உள்ள விலையுடன் ஒப்பிடும் போது இது மிகக் குறைவான விலையாகும். ஏகபோக கொள்முதல் முறையை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தியதன் மூலம் அரிசி இருப்பைப் போதுமான அளவுக்கு உயர்த்துவதை அரசு உறுதி செய்துள்ளது. ஏகபோகக் கொள்முதல் முறையின் கீழ்வரும் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கும் மேலாக, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 ஊக்கத்தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு நமது மாநிலத்தில் விளைச்சல் வளமாக இருந்தமையால், முன் எப்போதுமில்லாத அளவுக்கு அரிசி உற்பத்தி 82.15 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்தது. இந்த ஆண்டும் இதே அளவு நல்ல விளைச்சல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயத்திற்காகக் கடன்பெற்றோர், கடன்பெறாதோர் என்ற இருசாராருக்கும் பொருந்தும் வகையில், ஒரு புதிய விரிவான பயிர்காப்புறுதித் திட்டம் இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உணவுப் பயிர்களும், தோட்டக்கலைப் பயிர்களும் அடங்குவதோடு, சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அளிக்கப்படும்.

வேளாண்மையை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு பாசனத் திட்டங்களில் தொடர்ந்து கணிசமாக முதலீடு செய்து வருகிறது. இந்த ஆண்டு சிறு பாசன ஏரிகளை மேம்படுத்தும் பணிக்கு முதலீடு செய்வதற்காக நபார்டு வங்கியின் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காவிரி நதி நீர்க் கால்வாய்களில் ரூ.50 கோடி செலவில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாசனப் பகுதிகள் மேம்பாடு மட்டுமின்றி, மானாவாரிப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களின் மேம்பாட்டிற்கும் அரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. தரிசு நில மேம்பாட்டுப் பணிகளை ஊக்குவித்து, துரிதப்படுத்த வேண்டி, மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 10 இலட்சம் எக்டேர் தரிசு நிலப்பரப்பை பத்தாண்டு காலத்தில் மேம்படுத்துவதற்கான தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், புதுக்கோட்டை, திருநெல்வேலி, ஈரோடு, விழுப்புரம்,

சிவகங்கை, மதுரை, விருதுநகர், திருவண்ணாமலை, தருமபுரி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்நடைச் செல்வத்தின் தரத்தையும் வளத்தையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள இந்த அரசு மாநிலத்தில் உள்ள சுமார் 2 கோடி கால்நடைகளின் நலத்தைப் பாதுகாக்க, தொலைநோக்குப் பார்வையுடன், கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்கியுள்ளது. கால்நடை மருந்தகத்தை எளிதில் சென்றடைய வசதியில்லாத தொலை தூரத்திலுள்ள கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டு, அந்தக் கிராமப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கும் வகையில் சிறப்பு கால்நடைப் பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 26.2.2000 தேதி வரை 297 முகாம்கள் நடத்தப்பட்டு 9,99,582 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடை வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் ஒரு புதிய கொள்கையை முதலமைச்சரின் வேண்டுகோளைத் தொடர்ந்து மாநிலத் திட்டக்குழு வகுத்துக் கொண்டிருக்கின்றது.

உழவர்களின் விளை பொருள்களுக்குத் தேவையான விற்பனைச் சந்தை வசதிகளை மேம்படுத்த இந்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உழவர்கள் தாம் உற்பத்தி செய்த பழங்கள், காய்கறிகள் போன்றவற்றுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும், தனியார் அங்காடிகளை விட குறைந்த விலையில் நுகர்வோர் அத்தகைய பொருட்களைப் பெற்றிடவும், இந்த அரசு உழவர்களையும் நுகர்வோரையும், இடைத்தரகர்களின்றி, ஓரிடத்தில் சேர்த்திடும் புதியதோர் அமைப்பான உழவர் சந்தைகளைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு உழவர்களிட மிருந்தும், பொதுமக்களிட மிருந்தும் மிகப்பெரும் வரவேற்பும் பாராட்டும் கிடைத்ததனால், மாநிலம் முழுவதும் படிப்படியாக 100 நகர்ப்புற மையங்களில் இத்தகைய உழவர் சந்தைகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கனவே அறிவித்தவாறு, மதுரையில் ரூ.17 கோடி செலவில் நெல் விற்பனை அங்காடி ஒன்றும் திருச்சியில் ரூ.12.30 கோடி செலவில் வெல்ல விற்பனை அங்காடி ஒன்றும், பெருந்துறையில் ரூ.30.89 கோடி செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி ஒன்றும் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாநிலத்தில் புதிய தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழ்நாடு தொடர்ந்து வெற்றியடைந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தகவல் தொழில்நுட்பவியல் துறை அதிக அளவில் முதலீட்டினை ஈர்க்கும் துறையாகும். டாடா ஆலோசனை நிறுவனம், எச்.சி.எல்., இன்போசிஸ், விப்ரோ, போலாரிஸ் போன்ற மென்பொருள் மேம்பாட்டில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு அரசு அளிக்கும் ஆதரவுடன், தமிழ்நாட்டில் மென்பொருள் மேம்பாட்டு மையங்களை உருவாக்கியுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகமும் (TIDCO), தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனமும் (ELCOT) சேர்ந்து ரூ.338 கோடி முதலீட்டில் சென்னை தரமணியில் அமைத்து வரும் நவீன தொழில் நுட்ப வசதியுடன் கூடிய டைடல் பூங்கா இன்னும் சில மாதங்களில் முடிவு பெற்று செயல்படத் துவங்கும். சமுதாய இணையப் பணிகள் கணிசமான அளவிற்கு அதிகரிப்பதற்கு உதவும் வகையில் இம்மாநிலத்தில் நவீன தகவல் தொடர்பு கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்காக, "வோர்ல்ட் டெல்" நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் உருவாக்கிய திட்டம் வரும் நிதி ஆண்டில் செயல்படத் தொடங்கும். சிங்கப்பூர் பிரதமர் அண்மையில் இங்கு வருகை தந்ததும், அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு குழுவினர் சிங்கப்பூருக்குச் சென்றதும் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.

வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தை அரசு நிர்வாகத்தில் பயன்படுத்திக் கொண்டு மக்களுக்கான



சேவைகளை வெளிப்படையாகவும், விரைவாகவும், துல்லியமாகவும் வழங்கிடும் நோக்கத்துடன், மாவட்ட நிர்வாகத்தை கணினி மயமாக்கும் முயற்சியை இந்த அரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள கணினி மயமாக்கும் இந்தத் திட்டம் ஏனைய எல்லா மாவட்டங்களுக்கும், படிப்படியாக அரசின் அனைத்துத் துறைகளுக்கும் விரிவு படுத்தப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோல, இந்த அரசு, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், துணை நகரங்களையும், தொழிற்பேட்டைகளையும் உருவாக்குவதற்கும் தேவையான முதலீடுகளை கணிசமாக அதிகரிக்கும். செய்யாறு, திருப்பெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டை, வடமங்கலம், சிறுசேரி ஆகிய இடங்களில் மாநிலத் தொழில் முன்னேற்ற கழகம் புதிய தொழிற் பூங்காக்களை உருவாக்கிவருகிறது. நெமிலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ந்து வரும் தொழிற்பூங்காக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், அடிப்படை வீட்டுவசதி கட்டமைப்புப் பணிகளும் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்சக்தித் துறையைப் பொறுத்தவரை, தனியார் துறையில், பேசின்பிரிட்ஜ் அருகே 196 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் ஒரு மின்சக்தித் திட்டம் சென்ற ஆண்டு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பிள்ளைப்பெருமாநல்லூர், நெய்வேலி, சாமல்பட்டி ஆகிய இடங்களில் தனியார் மின்சக்தித் திட்டங்கள் உருவாக்கும் வேலை நடந்து வருகிறது. தமிழ்நாடு மின்வாரியத்தின் 330 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் வரும் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். கோவில்களப்பாலில் எரிவாயுவை ஆதாரமாகக் கொண்ட 107 மெகாவாட் உற்பத்தி திறன் உள்ள மின்திட்டம், வரும் நிதியாண்டில் மின் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாநிலத்தில் கிடைக்கும் ஒட்டுமொத்த மின் உற்பத்தி, மாநிலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில், மத்திய அரசின் மின் உற்பத்தித் திட்டங்களுக்குக் கணிசமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மின் வாரியமும் தடையின்றி தரமாக மின்சாரத்தை நுகர்வோர்களுக்கு அளிக்கவும், மின்இழப்பை 16 சதவீதத்திற்குக் கீழ் குறைப்பதற்கும், மின் அனுப்புகை மற்றும் மின்பங்கீட்டுத் திட்டங்களில் அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது.

மாநிலத்தின் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்வதைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புறப் பகுதிகளில் அதிக முதலீடு செய்வதன் அவசியத்தையும், இந்த முதலீட்டிற்குத் தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்டுவதில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் பங்கையும் இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கான விரிவான சட்டமொன்றை இம்மாமன்றம் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நிதி நிறுவனங்களிடமிருந்தும், சந்தையிலிருந்தும் நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கும், நகர்ப்புற வசதிப் பணிகளை நிறைவேற்றுவதில் தனியாரை ஈடுபடுத்துவதற்கும் இந்த சட்டம் உதவும். தொழில் வரி விதிக்கும் நடைமுறை, அது மிகவும் வெளிப்படையாக இருக்கும் வகையிலும், நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் வருவாயை அதிகரிக்கும் வகையிலும் சீரமைக்கப் பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கு மாநிலத்தின் வருவாயிலிருந்து கணிசமான நிதியை மாற்றித் தருவதோடு, அவற்றின் அடிப்படை வசதித் திட்டங்களுக்காக நிதி அமைப்புகளிலிருந்து நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கும் மாநில அரசு வழிவகை செய்து தருகிறது. மொத்தம் 205 மில்லியன் அமெரிக்க டாலர் செலவில் செயல்படுத்தப்படவுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலகவங்கி ஒப்புதலளித்து 105 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது. நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை அதிகரிக்கவும், அப்பகுதிகளில் மக்களுக்குத் தேவையான வசதிகளை அதிகரிப்பதற்கும் தேவைப்படும் மானியம் மற்றும் கடன் வசதிகளை அளிக்க வழிவகை செய்யும் இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது.

மாநிலத்தில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் ரூ.215 கோடி செலவில் தெருக்களையும் சாலைகளையும் மேம்படுத்தும் பெருந்திட்டம் ஒன்றை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலத்தில் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள அனைத்து பொது உலர்கழிப்பிடங்களையும் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றியமைப்பதற்கு ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட திட்டம் இவ்வாண்டில் முழுமை பெறும். மாநகராட்சிகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கு ஓலைகளற்ற தீப்பிடிக்காத கல்நார்க் கூரை வீடுகள் கட்டும் திட்டத்தின் மூலம், இந்த ஆண்டு 12,082 குடும்பங்கள் பயனடையும். மாநகராட்சிப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் எஞ்சியுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வரும் ஆண்டில் கல்நார்க் கூரை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். சென்னை மாநகரில் நீர்க்கால்வாய்ப் பகுதிகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கும், சென்னை மாநகர் துரித ரயில் திட்டத்தினால் இடம் பெயர்ந்தோருக்கும் மாற்றிடம் வழங்கும் திட்டத்தின் கீழ் 3,000 குடியிருப்புகள் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கட்டப்பட்டு, பிப்ரவரி மூன்றாம் நாள் அண்ணா நினைவு நாளன்று முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதே பகுதியில் மேலும் 3,500 குடியிருப்புகள் கட்டும்பணி நடைபெற்று வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவித்ததற்கிணங்க இருபது ஆண்டு காலமாக அனுபவித்து வரும் அரசு புறம்போக்கு நிலங்களை, அரசுக்கு அந்த நிலம் தேவையில்லாத பட்சத்தில், அனுபவித்து வருபவர்களுக்கே அந்த இடங்களுக்கான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்குரிய வழிமுறைகள் வகுக்கப்படும்.

தமிழகத்தின் தலைநகரத்தை எழிலார்ந்த நகரமாக மாற்றும் திட்டத்தின் கீழ் சென்னை நகருக்குள் தொடங்கப்பட்டுள்ள மேம்பாலப் பணிகளுள் இரண்டு மேம்பாலங்கள் திட்டமிட்ட காலத்திற்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது பெருமையும் மனநிறைவும் அளிக்கின்றது. எஞ்சியுள்ள மேம்பாலங்களும் விரைவில் கட்டி முடிக்கப்படும். மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இவை பெரிதும் உதவும். ரூ.213 கோடி செலவில் சென்னையைச் சுற்றியுள்ள முக்கிய ஆரச்சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டப்பணி நடைபெற்று வருகிறது. 19 கி.மீ. நீளமுள்ள சென்னை புறவழிச் சாலை அமைக்கும் பணி வரும் அக்டோபர் மாதத்துக்குள் முடிவுற்று, அச்சாலை வாகனப் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படும். மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடும் நோக்கத்துடன், கோயம்பேட்டில் ரூ.103 கோடி செலவில் வெளியூர்ப் பேருந்து முனையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் நிலைப்பணி விரைவாக நிறைவேறி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த இரண்டாம் நிலைப் பணி புனித தோமையர் மலை வரை நீட்டிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையிலுள்ள முக்கியநீர் வழிகளில் தூர்வாரும் பணி ரூ.300 கோடி செலவில் ஹட்கோவின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் பங்கிங்காம் கால்வாயிலும், அடையாறிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. "நமக்கு நாமே" திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக முதலில் ரூ.10 கோடி நிதியொதுக்கப்பட்டிருந்த போதிலும், பொதுமக்களின் தேவைக்கேற்ப, இந்த நிதியாண்டில் இதற்காக இந்த அரசு மேலும் ரூ.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே இத்திட்டம் "மக்களின் திட்டமாக, மக்களாலேயே அவர்களின் உதவியோடு மக்களுக்காக நிறைவேற்றப்படும் திட்டமாக", செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாக மலர்ந்துள்ளது. அரசின் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை எல்லாம் கிராம அளவில் ஒருமுனைப்படுத்துவதற்கென்றே உருவாக்கப்பட்ட "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" இதுவரை 634 கிராம ஊராட்சிகளின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமையை ஆய்வு செய்வதற்காக அரசு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆணையம் தனது அறிக்கையை 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாளுக்கு முன்னர் அளிக்கும்.

மாநிலத்தில் வறுமையை ஒழிப்பதில் நாம் அடைந்துள்ள வெற்றி குறித்து பெருமிதம் கொள்ளும் வேளையில், இதன் காரணமாக ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கான நிதியொதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கான இத்திட்டங்களின் ஒதுக்கீட்டை, மொத்த ஒதுக்கீட்டின் 7.062 சதவீதத்திலிருந்து 4.987 சதவீதமாகக் குறைத்துள்ளதால், நமது மாநிலம் ரூ.277 கோடி அளவுக்கு மத்திய நிதியுதவியை இழந்துள்ளது. இந்த அரசு இப்பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஊரக வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கான ஒதுக்கீட்டின் ஒரு பகுதியை வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தும் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு மாநில அரசின் இந்தக் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் என்று நம்பி எதிர்பார்க்கிறோம்.

தென் மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்தளித்திட இந்த அரசு, நீதியரசர் திரு இரத்தினவேல்பாண்டியன் அவர்கள் தலைமையில், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திரு. ஆர்.ஏ.சீத்தாராமதாஸ், திரு. ஏ.வெங்கட்ராமன் ஆகியோரை உறுப்பினர்களாகவும், திரு. என்.முருகன், ஐ.ஏ.எஸ்., அவர்களைச் செயலாளராகவும் கொண்டு குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவினர் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து மக்களை நேரடியாகச் சந்தித்து கருத்தறிந்து வருகின்றனர். இக்குழு தனது இடைக்கால அறிக்கையை பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கையைப் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரும் ஏப்ரல் மாதத்தில், இக்குழு, இறுதி அறிக்கையை அரசுக்கு அளிக்கும்.

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் நமது மாநிலம் மிகப் பெரும் வெற்றியை அடைந்துள்ளது. இச்சூழ்நிலையில், மாநில வாரியான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை முடிவு செய்ய 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களைப் பின்பற்றாமல் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே தொடர்ந்து பின்பற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தேவையான திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்ற தமிழக சட்டப் பேரவையின் தீர்மானத்தை ஏற்று நடவடிக்கை எடுக்க முடிவெடுத்துள்ள மத்திய அரசுக்கு நமது பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் அனைத்து மாவட்டங்களிலும் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவும் தொடக்கக் கல்வி இயக்க முனைப்பு நடவடிக்கைகளை அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. பள்ளிகளில் கணினிக் கல்வியை அளிக்கும் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினிக் கல்விக்கான வசதிகளை அரசு அளித்துள்ளது. எஞ்சிய அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், அரசுக் கல்லூரிகளுக்கும் அடுத்த கல்வியாண்டில் இத்தகைய வசதிகளை செய்து கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற ஏழை மகளிருக்கு சிறு வியாபாரம் செய்ய குறைந்த வட்டி வீதத்தில், எளிதில் கடன் கிடைக்கும் வகையில், "மகளிர் சிறுவணிக சேமிப்புடன் இணைந்த

கடன் திட்டம்" என்றழைக்கப்படும் திட்டத்தின் கீழ் 55,956 மகளிருக்கு ரூ.5.35 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1999–2000ஆம் ஆண்டில், சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்டத்தினை அரசு செயல்படுத்தியுள்ளது. 2000ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நிலவரப்படி, 22,000 சுய உதவிக் குழுக்களில் சேர்ந்து 4.2 இலட்சம் மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து இரண்டாவது திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பயனடைந்த 318 வளர்ச்சி வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மூன்றாவது திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது. உலக வங்கியிடமிருந்து இதற்காக 5 ஆண்டு காலத்தில் ரூ.86.95 கோடி நிதியுதவி பெறப்படும். கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேலும் உயர்த்துவதற்கும், இளம் பெண்களின் உடல் நலம் மற்றும் அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு மான பல்வேறுத் திட்டப் பணிகளை ஒருமுனைப்படுத்திட இத்திட்டம் உதவிடும்.

அனைவருக்கும் முழுமையான சுகாதார நலத்தை அளிக்கும் நோக்கத்துடன், திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்ட "வருமுன் காப்போம் திட்டம்" மாநிலம் முழுதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தொலைதூரத்தில் உள்ள, அரசு மருத்துவ அமைப்புகள் இல்லாத கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம் மருத்துவ முகாம்களில், நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களால் அனைவருக்கும் உடல் நலப் பரிசோதனை செய்யப்படுவதோடு, நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப்படுகின்றன. நோயைக் கண்டறிந்து போக்குவதற்கும், தேவையான சுகாதார நலப் பணிகளை மக்களுக்குப் பெருமளவில் அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏராளமானோர் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்கு மக்களிடமிருந்து பெருமளவு வரவேற்பு கிடைத்து வருகிறது. இதுவரை 1,016 முகாம்களில் 11,32,855 பேர் பயனடைந்துள்ளனர்.

சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன், இந்த அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.17.50 கோடி செலவில், 50 இடங்களில் "பெரியார் நினைவு சமத்துவபுரங்களை" ஏற்படுத்தி வருகிறது. இதுவரையில், 64 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன; மேலும் 86 சமத்துவபுரங்கள் அமைக்கும்பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் பொதுவாக தொழில் அமைதி நிலவி வருகின்றது. தொழிலாளர் நலனுக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தொழிற்சாலைகள் மூடப்படுவதன் காரணமாக வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.250 நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று 1999ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அமைப்பு ரீதியில் அல்லாத பல்லாயிரம் தொழிலாளர்களின் நலனைப் பேண ஒரு வாரியம் உருவாக்கப்பட்டு, அதன் மூலமாக அவர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம், மகப்பேறு நலத்திட்டம், பணி முடிவு நலத்திட்டம் முதலிய திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்பாடு தொடங்கப்பட்டுள்ளது.

மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய புதுத் திட்டங்களை உருவாக்குவது எவ்வளவு அவசியமானதோ, அந்த அளவுக்கு ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களினால் உருவான பொதுச் சொத்துக்களை முறையாகப் பராமரித்து வருவதும் முக்கியமானது. இதனை கருத்திற்கொண்டு, வரும் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி முனைப்பான நடவடிக்கை எடுத்திடவும், முந்தைய ஆண்டுகளில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு இன்னும் முடிக்கப்படாத பணிகளை விரைவுபடுத்தி முடித்திட முன்னுரிமை அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களின் நலனுக்காகத் தீட்டப்படும் பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் முழுப்பங்கேற்றுள்ள அரசுப் பணியாளர்களின் நலனை இந்த அரசு பேணிக் காப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது. நிதி இடர்ப்பாடு இருந்த போதிலும், அரசுப் பணியாளர்களுக்கு, அதிகரிக்கப்பட்ட அகவிலைப்படி மற்றும் பொங்கல் ஊதியக் கொடை வழங்கியதின் மூலம் அரசு தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது.




தமிழ்நாடு மக்களின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் இப்புத்தாயிரம் ஆண்டு மேலும் அதிக வாய்ப்புகளை உருவாக்கி வழங்கிடுமென்ற நம்பிக்கையுடன் நான் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**– தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1–3–2000 அன்று மேதகு தமிழக ஆளுநர் நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி அவர்கள் ஆற்றிய உரை.**

★ ★ ★



# தொடரும் பயணம்...

□ முதலமைச்சர் கலைஞர்

ஆளுநர் உரையின்மீது நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில் என்னையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் தவிர்த்து 37 பேர் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கின்றார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர், தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்தவர்கள் 8 பேர், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 பேர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 10 பேரும் இரண்டு மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த 8 பேரும் இரண்டேகால் மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். இந்த விவாதத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டசபையிலே நாலைந்து நாட்களாகப் புயல் அடித்தது, அடித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் புயலுக்கு மாறாக அவருடைய பேச்சு தென்றலாக இன்றைக்கு அமைந்து நமக்கெல்லாம் தெம்பூட்டியிருக்கின்றது.

பொதுவாக, தமிழ்நாட்டு மக்கள், சட்டமன்றத்திலே எது நடக்கிறது, யார் எதை, எப்படிப் பேசுகின்றார்கள், அதனால் யாருக்கு என்ன பலன் என்பதையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சட்டமன்றத்திற்குள்ள அந்தச் சிறப்பான தனி உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு, எதை வேண்டுமானாலும் பேசலாம், பொத்தாம் பொதுவில் புழுதி வாரித் தூற்றலாம் என்றால், மக்கள் மன்றம் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்காது. குறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லும் பொழுது, அதனைக் களைந்திடல் வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் எடுத்துரைக்கும் போது அதுபற்றிய உண்மையை அறிய விசாரணை நடத்திடல் வேண்டும், நடவடிக்கை எடுத்திடல் வேண்டுமென்ற அக்கறை உள்ளவன் நான் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக, இந்த அவையில் உள்ளவர்கள் அறிவீர்கள். இதுவரை நடந்து வந்துள்ள நிகழ்வுகளைக் கவனித்தால் இந்த உண்மை நிச்சயமாக விளங்கும் என்றே நான் நம்புகின்றேன்.

## ஜனநாயகத்திலும் சட்டமன்றத்திலும் நம்பிக்கை

ஜனநாயகத்திலும், ஜனநாயகத்தின் காப்பகமாக விளங்கிடும் சட்டமன்றத்திலும், நாம் எல்லோரும் மிகுந்த நம்பிக்கையும், ஈடுபாடும் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இங்கே வந்து அமர்ந்து நாட்டு நலத்திற்கும், வளத்திற்குமானத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது பற்றிப் பேச அவையிலே போதுமான இடம் இல்லை என்ற காரணத்தால்தான் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்து அவர்களுக்காகப் பேச, வாதாட, விவாதிக்க இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, இங்கே பேசுகின்றவர்கள் யாராக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் அல்லது எதிரிக் கட்சியாகவே இருந்தாலும் கூட, நாம் பேசுகின்ற விஷயங்கள் நாட்டுக்கு, தொகுதிக்கு, மக்களுக்கு எந்த அளவிற்குப் பயனுள்ளதாக, பலன் தருவதாக இருக்கும் என்பதை முடிவு செய்து கொண்டு பேசுவதுதான் மக்களாட்சியின் மாண்புக்கு நாம் செலுத்திடும் மரியாதையாக அமைந்திடும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நானோ, இங்கே உள்ள அமைச்சர்களோ, ஆளும் கட்சி உறுப்பினர்களோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களும் இல்லை. விமர்சனத்திற்குப் பயந்து ஒளிந்து கொள்கிறவர்களும் இல்லை. பொது வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற அளவில் தான், செய்யப்படுகிற விமர்சனங்கள், தரம் உள்ளவையாக இருந்தாலும், தரம் தாழ்ந்தவையாக இருந்தாலும் 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்று எல்லாவற்றையும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல பொறுத்துக் கொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதில் என் முனையளவும் பிசகாமல் நாங்கள் நடந்து வருகிறோம்.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தரப் பகைவர்களும் இல்லை என்று பேரறிஞர் அண்ணா சொன்னது கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல; அரசியலில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும்தான்.

நண்பர்களாக இருக்கும்போது போற்றிப் பாராட்டி புகழ்வதும் எதிர் முகாமிற்குச் சென்றதும் இல்லாததைப் பொல்லாததையும் பேசுவதும் தான் அரசியல் என்று ஆகிவிட்டால் பொது வாழ்க்கை என்பதே வெறும் போர்வையாக ஆகிவிடும். அதுமாத்திரமல்ல; அரசியல், பொது வாழ்க்கை என்றாலே மக்களிடம் கசப்பும், வெறுப்பும் ஏற்பட்டுவிடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே, இவற்றையெல்லாம் கவனமாகக் கருத்திலே நாம் அனைவரும் கொண்டிட வேண்டுமென்று விரும்புகின்றேன், கேட்டுக் கொள்கின்றேன்.

அந்த அடிப்படையிலே இங்கே நடைபெறுகின்ற வாதப் பிரதிவாதங்கள் அமைய வேண்டும் என்பது என்னுடைய விழைவு. வாதப்பிரதிவாதங்களில் சில நேரங்களில் சூடு பறந்து, சில நேரங்களில் விரசம் தலைகாட்டி, கவலைக்கு உள்ளாக்கியது என்றாலும் கூட, ஒரு சிலர் மிகுந்த கவனத்தோடு, எச்சரிக்கையோடு தங்களுடைய வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## கல்லூரியின் ஆண்டறிக்கை போல் இருக்கிறது

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல செய்திகளை இங்கே எடுத்துக்கூறி இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நீக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் ஒருமுறை அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் அறிக்கைபற்றி தொடக்கத்தில் எடுத்த எடுப்பில், இது ஒரு கல்லூரி ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொல்லி பத்திரிகையிலே அந்தச் செய்தி வெளி வந்தது. அதை நான் முழுமனதோடு ஏற்றுக் கொள்கின்றேன்.

'அக இருள் அகற்றி அறிவு ஒளி வீசச் செய்யும் இடம் தான் கல்லூரி' அவர் சொன்னது கல்லூரி யினுடைய ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொன்னார்கள். கல்லூரி என்பது சாதாரணமானது அல்ல. அவர் கல்லூரியைக் கேவலமாக எண்ணி சொல்லியிருக்கமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அக இருள் அகற்றி அறிவு ஒளிவீசச் செய்யும் இடம் தான் கல்லூரி, அங்கு சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மாணவர்கள் தேர்ச்சி அடையக்கூடிய பணி மேற்கொள்ளப் படுகிறது.

அதே போல இப்போது தமிழகத்திலே கல்வியிலே கணினியைப் புகுத்தி, சமூக ஒற்றுமைக்கு சமத்துவபுரங்களை நிறுவி, கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, மக்களின் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு, வருமுன் காப்போம் போன்ற திட்டங்களால் இந்த ஆண்டில் தமிழகம் அடைந்துள்ள மேம்பாடுகளை உள்ளடக்கிய ஆளுநர் உரையின் சிறப்பை, ஒரு கல்லூரியின் ஆண்டு அறிக்கைக்கு ஒப்பிட்டு, சுருக்கமாக, அதே நேரம், மிகச்சிறப்பானதாக அவர் எடுத்துரைத்தது, அதுபோல வேறொரு வாழ்த்துரையை நாம் எங்கும் காண இயலாது. எனவே அவருக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஆண்டு அறிக்கைதான்; நான்கு ஆண்டு காலம் ஆண்டு; இப்போது தரப்படுகின்ற அறிக்கைதான், இந்த அறிக்கை என்பதையும் நான் அவருக்குக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது என்று ஒரு கேள்வி. சில விஷயங்களைப் பாராட்டி நம்முடைய பழனிச்சாமி போன்றவர்கள் பேசினார்கள். சுப்பராயன் அன்றைக்கு, என்ன இதில் ஒன்றுமே இல்லை; இதிலே உள்வாங்குவதற்கு, இந்த உள்வாங்குவது என்பது அவருக்கே உரிய ராயல்டிவார்த்தை. இதிலே உள்வாங்குவதற்கு என்ன இருக்கிறது என்று அன்றைக்கு அவர் கேள்வியை எழுப்பினார்கள். ஆளுநர் உரையில் ஒன்றுமே இல்லை என்கின்ற விவாதம் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து பல பேரால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

## குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப்பலகை நிறுவியுள்ளோம்

தமிழ் எழுத்தாளர்களுக்கு குறள்பீடம் விருது. இதை நம்முடைய அருமை நண்பர், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் ஒரு புத்தக வெளியீட்டு விழாவிலே எடுத்துச் சொன்னார்கள். ஞானபீட விருது தரப்படுவது போல இங்கேயும் ஒரு பீடம் ஏற்படுத்தி ஒரு விருது தர வேண்டும் . அந்த விருதை வழங்குகின்ற அகாடமிக்கு முதலமைச்சரே தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளே இருந்து எதிர்க்கட்சிகள் சொல்வதை மாத்திரம் அல்ல; வெளியிலே இருந்து எதிர்க்கட்சிகள் மூலமாகத் தரப்படுகின்ற கருத்துக்களைக்கூட 'உள்வாங்குகின்ற' அரசு தான் இந்த அரசு என்பதற்கு அடையாளமாகத் தான்அவருடைய விருப்பப்படி நானே தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டு குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப்பலகை ஒன்றை நிறுவி இருக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே உருது அகாடமி அமைக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 15 இலட்ச ரூபாய் இப்போது முன் பணமாக அதற்கு வழங்கப்பட இருக்கிறது. சமூக சீர்திருத்தத்துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தி, அன்றைக்கு இங்கே பேசப்பட்டது போல பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நாம் முனைந்திருக்கிறோம்.

## கடந்தகால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை

ஏகபோக கொள்முதல் முறையின் கீழ் மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். கடந்த கால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

தரிசு நிலமேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு, 10 மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலங்களில் தரிசு நில மேம்பாட்டுப்பணி முடிக்கப்பட்டுவிட்டது. வரும் ஆண்டில் சுமார் 30,000 எக்டேர் நிலப்பரப்பு மேம்பாட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடை வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் புதிய கொள்கையை உருவாக்க வேண்டுமென்று மாநில திட்டக் குழுவை நான் கேட்டுக்கொண்டு அந்த முயற்சியிலே மாநில திட்டக்குழு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. வருகிற நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் இடம் பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது

100 நகர்ப்புற மையங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தையைப்பற்றி பேசப்பட்டது. நல்ல திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வேறு சிலரும் இங்கே பேசி அதிலே உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றி தெரிவிக்கிறேன். குறைகளே இல்லையென்று நான் சொல்லமாட்டேன். எதிலும் குறை இருக்கிறது. சந்திரனுக்கே கூட களங்கம் இருக்கிறது. அதுபோல எந்தத் திட்டமாக இருந்தாலும் ஒரு குறை இருக்கும். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உழவர் சந்தை தொடங்கப்பட்டது நவம்பர் மாதம் 14 ஆம் தேதி மதுரையில் — பேரவைத் தலைவர் அவர்கள் முன்னிலையிலே இந்த உழவர் சந்தைத் தொடங்கப்பட்டது. இதுவரையில் 27 சந்தைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பல தேதிகளில் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த 27 உழவர் சந்தைகளில் 8.3.2000 வரை, அதாவது நேற்று வரை விற்பனையான காய்கறிகளின் மதிப்பு 11 கோடியே 8 இலட்சத்து 31,708 ரூபாய் என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனையினுடைய அளவு எத்தனை கிலோ காய்கறிகள் என்றால் ஒரு கோடியே 89 இலட்சத்து 32,086 கிலோ காய்கறிகள் விற்பனையாகி இருக்கின்றன. இதிலே பயன் பெற்ற விவசாயிகள், பயன் பெற்ற விவசாயிகள் என்றால் வந்தவர்களே மறுநாள் வரக்கூடும். ஆனாலும் தொடர்ந்து வந்தவர்கள், திரும்பத் திரும்ப வந்தவர்கள் என்ற கணக்கைப் பார்த்தால் 1,55,998 விவசாயிகள். பயன் பெற்ற பொது மக்களும், திரும்பத் திரும்ப வந்திருக்கக்கூடும். அந்தக் கணக்கைப் பார்த்தால் 68,32,673 பேர். மேலும் 73 உழவர் சந்தைகள் விரைவிலே தொடங்கப்பட இருக்கின்றன 'என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மதுரை, திருச்சி, பெருந்துறையில் அங்காடிகள்

மதுரையிலே 17 கோடி ரூபாய் செலவிலே நெல் விற்பனை அங்காடி; அதனுடைய பணி,

தொடங்கப்பட்டு விட்டது. திருச்சியிலே 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வெல்ல விற்பனை அங்காடி, அதனுடைய பணியும் தொடங்கப்பட்டு விட்டது. பெருந்துறையில் 30.89 கோடி ரூபாய் செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி; பணி தொடங்கப்பட்டுவிட்டது. அதுபற்றி நேற்றைய தினம் நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் சிலாகித்து நன்றி கூறி பேசினார், நல்ல நேரத்திலே, நான் இல்லாமல் போய் விட்டேன். மற்ற நேரங்களிலே, இருந்தேன். நன்றி கூறிப் பேசுகிற நேரத்திலே நான் இங்கு இல்லாமல் போய்விட்டேன். அதற்கு நான் வருந்துகிறேன். பிறகு கேள்விப்பட்டேன், படித்துப் பார்த்தேன் பேச்சை, அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

தரமணியில் 338 கோடி ரூபாய் செலவிலே டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படுகிறது. 10 இலட்சம் சதுர அடி கொண்ட அந்தப் பூங்கா மே மாதத்திலே திறப்பு விழா நடைபெற இருக்கிறது என்பதையும் நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்கின்றேன்.

தீப்பிடிக்காத கல்நார் வீடுகள், மாநகராட்சிகளிலே இந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட இருக்கிறது. 19 கிலோ மீட்டர் நீளம் உள்ள சென்னை புறவழிச்சாலை, இந்த ஆளுநர் உரையிலே அந்தத் திட்டமும் இடம் பெற்றிருக்கிறது. 213 கோடி ரூபாய் செலவிலே சென்னையைச் சுற்றியுள்ள ஆரச் சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. அரசு மேல்நிலைப்பள்ளி, கல்லூரிகளில் கணினி வசதிக்காக, இதுவரையிலும் 666 மேல்நிலைப்பள்ளிகளிலே கணினி பயிற்சிக்கான ஏற்பாடு நடைபெற்றதைத் தொடர்ந்து மேலும் 535 மேல்நிலைப் பள்ளிகளில் இந்த ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு முடிவடைய இருக்கிறது.

420 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு இரண்டாவது திட்டம் **Urban Development** திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. மேலும், 86 சமத்துவபுரங்கள், இதுவரையிலே 64 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதிலே ஒன்றிரண்டு சமத்துவபுரங்களிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. அவைகளை எல்லாம் சரிப்படுத்தி, 35 ஆயிரம் ரூபாய் போதாது என்று சொன்னார்கள், அதைவிட குறைந்த செலவிலே கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எல்லாம்கூட நல்ல முறையிலே இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

## கணினிமயமாக்கும் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படவிருக்கிறது

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் கணினி மயமாக்குகின்ற திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த ஆண்டு விரிவாக்கப்பட இருக்கிறது. கணினிமயம் என்பது சாதாரணமான விஷயமல்ல. இன்றைக்கு இந்தியாவிலேயே கணினி மயமாக்குகின்ற திட்டத்தில் தமிழ்நாடுதான் முதல் இடம் வகிக்கிறது என்பதையும் நான் சிறப்பாக இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நகர்ப்புற பகுதிகளில் 215 கோடி ரூபாய் செலவில் தெருக்களையும், சாலைகளையும் மேம்படுத்தும் திட்டம். 10 கோடி ரூபாய் செலவில் உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் நீரடிக் கழிப்பிடங்களாக மாறும் திட்டம். இது சாதாரணமான திட்டமாகத் தெரியலாம். ஆனால், உலர்க் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதால் மலத்தை தலையிலே அள்ளி சுமக்கின்ற மனிதனுடைய, சமுதாய விடுதலை அதிலே தொக்கி நிற்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. 20 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்போருக்கு பட்டா வழங்கப்படும். அரசுக்குத் தேவையில்லாத பட்சத்தில் அந்த இடம் அவர்களுக்கே உரிமையாக்கித் தரப்படும். 300 கோடி ரூபாய் செலவில் சென்னையில் உள்ள நீர் வழிகளில் தூர்வாரும் பணி ஒரு திட்டம். அது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## நீதிபதி இரத்தினவேல்பாண்டியன் குழு பரிந்துரை செய்துள்ள திட்டம்

தென் மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு திட்டங்களுக்கான உச்சநீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் இரத்தினவேல்பாண்டியன், சீத்தாராமதாஸ், ஓய்வு பெற்ற ஐ,ஏ,எஸ், அதிகாரி, வெங்கட்ராமன், ஓய்வுபெற்ற, ஐ,ஏ,எஸ், அதிகாரி செகரட்டரி முருகன் இவர்களைக் கொண்டு ஒரு குழு தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் ஒரு திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். ஒரு பகுதி வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த பகுதி விரைவிலே வழங்கப்பட இருக்கிறது. அவைகள் வழங்கப்பட்ட பிறகு என்னென்ன பணிகள் தொடங்கப்படும் என்பதை வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவிப்பேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக ஆளுநர் உரையிலே முதல் பக்கத்திலே அல்லது இரண்டாம் பக்கத்திலே இடம் பெற்ற அரசியல் சட்டத்திலே மாறுதல் அல்லது ஆய்வு அல்லது திருத்தம். இதில் ஏதோ ஒன்று நடைபெறும் போது, எந்தெந்தப் பிரச்சினைகள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதை வகுத்துச் சொல்லியிருக்கிறோம். 1999—ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலையொட்டி உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியினுடைய தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாசகத்தை இங்கே படித்துக் காட்டவிரும்புகின்றேன்.

1999 நாடாளுமன்ற தேர்தல்களை ஒட்டி உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில்,

''We shall appoint a Commission to review the Constitution of India not only in the light of experiences and developments since 1996, but indeed, of the entire post-independence period, and to make suitable recommendations.

We are convinced that there is a clear case for devolution of more financial and administrative powers and functions to the States. We will take suitable steps to ensure harmonious Centre-State relations in the light of the recommendations of the Sarkaria Commission and also effect decentralisation right upto the grass roots level by activating and involving Panchayats and local bodies''

— என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது,

"**1996—**ஆம் ஆண்டிலிருந்து மேலும் நாடு விடுதலை பெற்றதிலிருந்து நமக்கு ஏற்பட்டு வரும் அனுபவங்கள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தை மறுஆய்வு செய்து உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கு ஒரு கமிஷனை அமைப்போம்.

மாநிலங்களுக்கு மேலும் அதிக நிதி மற்றும் நிர்வாக ஆதாரங்களையும், செயல்பாடுகளையும் வழங்குவதற்கு தெளிவான நிலை ஏற்பட்டு இருப்பதை நாங்கள் நம்புகிறோம். சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய, மாநில உறவுகள் இணக்கமான வகையில் அமைவதை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

மேலும் ஜனநாயக அமைப்பின் வேர்களாக விளங்கும் ஊராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளை ஈடுபடுத்தும் வகையில், அவைகளுக்கு தேவையான அதிகாரங்களை வழங்குவோம்".

— என்ற தேர்தல் அறிக்கைக்குப் பிறகு **1—2—2000** அன்று மத்திய அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்:

''The Commission shall examine in the light of **experience of the past 50 years as to how far the existing provisions of the Constitution are capable of responding to the needs of efficient, smooth and effective system of** governance and socio-economic development of modern India and to recommend changes, if any, that are required to be made in the Constitution within the framework of parliamentary democracy **without interfering with the basic structure or basic features of the Constitution''**

இதுதான் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அதாவது,

"அரசியல் சட்ட மறு ஆய்வுக் கமிஷன் கடந்த 50 ஆண்டு காலமாக ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில், தற்போது உள்ள அரசியல் சட்டத்தின் அம்சங்கள், திறமையான, சுமூகமான நல்ல விளைவுகளை வழங்கிடக் கூடிய நிர்வாக அமைப்பின் தேவைகளை எப்படியெல்லாம் நிறைவு செய்துள்ளது என்பதைப் பரிசீலனை செய்து,

நவீன இந்தியாவின் சமூக, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஆய்வு செய்து, அரசியல் சட்டத்தின் அடிப்படை அமைப்பையோ, **அடிப்படை அம்சங்களையோ குலைத்திடாத வகையில் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற கட்டமைப்புக்குள் தேவையான பரிந்துரைகளை வழங்கும்",**

பேரறிஞர் அண்ணா அவர்கள் **1969**ஆம் ஆண்டு பொங்கல் விழாவையொட்டி 'காஞ்சி' இதழில் எழுதிய கட்டுரையில்,

இதுதான் அண்ணா அவர்கள் "தம்பிக்கு கடிதம்" என்று கடைசியாக அவர்கள் மறைவதற்கு சில நாட்களுக்கு முன் எழுதிய கடிதம் அதில் —

"மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரம் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கின்றது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி.

நமது கழகம் மட்டுமின்றி வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதனையும் வலியுறுத்த முன்வந்துள்ளன.

அரசியல் கட்சிகளைச் சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றனர்.

நாம் அரசு நடத்தியதால் கிடைத்திருக்கின்ற நற்பயன்களிலே இதனையும் ஒன்று என்றே கருதுகின்றேன்".

பொங்கலையொட்டி வெளியிடப்பட்ட **'Home Rule'** இதழில் **''HAIL! THE DAWN!''** என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கட்டுரையில்,

''If by being in office, the D.M.K. is able to bring to the notice of the thinking public, that the present Constitution is a sort of dyarchy by the back door that would be a definite contribution indeed to the political world''.

அதாவது,

"பதவியில் இருப்பதன் மூலம்; இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொதுமக்களின் கவனத்திற்கு தி.மு.க. கொண்டுவர முடியுமானால், அது

உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்" என்று அண்ணா எழுதியுள்ளார்.

சோவியத் ரஷ்யாவில்,
*1918*ஆம் ஆண்டு, பின்னர்
*1924*ஆம் ஆண்டு, பின்னர்
*1936*ஆம் ஆண்டு, பின்னர்
*1974*ஆம் ஆண்டு

ஆகிய ஆண்டுகளில், நான்கு முறை அரசியல் சட்டத்தைத் திருத்தினார்கள். மன்னிக்க வேண்டும். திருத்தவில்லை. அடியோடு மாற்றினார்கள். திருத்தங்களைச் செய்யாமல், பழைய பிரிவுகளை நீக்காமல், புதிய பிரிவுகளை இணைக்காமல், மாறிவரும் சூழ்நிலைகளையும், மக்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, புதிய அரசியல் சட்டங்களே சோவியத் ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்டன.

### அரசியல் சட்ட நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு கூறிய கருத்து

அரசியல் சட்ட நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு பேசும்போது;

'While we want this Constitution to be as solid and as permanent in structure as we can make it, nevertheless there is no permanence in Constitutions. There should be a certain flexibility. If you make anything rigid and permanent you stop a nation's growth, the growth of a living, vital, organic people'. ............In any event, we should not make a Constitution, such as some other great countries have, which are so rigid that they cannot be adapted easily to changing conditions. Today especially, when the world is in turmoil and we are passing through a very swift period of transition, what we may do today may not be wholly applicable tomorrow''

அதாவது,

இந்த அரசியல் சட்டம், கெட்டியானதாகவும், நிரந்தரமானதாகவும் அமையத்தக்க வகையில் நாம் உருவாக்கினாலும் கூட, அரசியல் சட்டங்களில் நிரந்தரமானது என்று எதுவும் இல்லை. அதில் நெகிழ்வுத் தன்மை இருந்திடல் வேண்டும். எதையும் இறுக்கமானதாகவும், நிரந்தரமானதாகவும் அமைத்துவிட்டால், நாட்டின் வளர்ச்சியை வாழும், உயிர்ப்பு சக்திமிக்க மக்களின் வளர்ச்சியையும் நிறுத்திவிடுகிறீர்கள் என்று ஆகிவிடும்...ஒருசில நாடுகளில் இருப்பதைப் போல, இறுக்கமான, மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மாற்றி பின்பற்ற முடியாததான அரசியல் சட்டத்தை நாம் உருவாக்கிவிடக்கூடாது. கொந்தளிப்பான சூழலில் உள்ள இன்றைய உலகில், வேகமாக மாறிவரும் சூழ்நிலைகளில், இன்று நாம் உருவாக்குவது, நாளையே முழுதும் பயனற்றதாகப் போய்விடக்கூடும்.

மேலும் சொல்கிறார் :

''A Constitution which is unchanging and static-it does not matter how good it is - is a constitution that has outlived its use. It is in its old age already and gradually approaching its death. A constitution to be living must be growing, must be adaptable, must be flexible, must be changeable''

அதாவது,

"எவ்வளவு நல்ல அரசியல் சட்டம் என்றாலும், ஓர் அரசியல் சட்டம் மாறாமல் நிலைத்துவிட்டதாக இருக்குமானால், அந்த அரசியல் சட்டம் அதன் பயன்பாட்டை இழந்துவிட்டது என்று பொருள். அது ஏற்கெனவே முதுமை அடைந்து விட்டது என்று அர்த்தம். அப்படிப்பட்ட அரசியல் சட்டம் மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகப் பொருள். ஓர் அரசியல் சட்டம் உயிரோடு இருக்குமென்றால், அது வளர்ந்து வருவதாக, பின்பற்றக்கூடியதாக, நெகிழ்வுத் தன்மை உள்ளதாக, மாற்றியமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்".

### டாக்டர் அம்பேத்கர் கருத்து

டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார் :

''A Constitution is not an end in itself, rather a means for ordering the life of a nation. The generation of yesterday might not know the needs of today, and if yesterday is not to paralyse today; it seems best to permit each generation to take care of itself''

அதாவது,

அரசியல் சட்டம் என்பது, அதுவே முடிந்த முடிவாக அமைந்துவிட முடியாது. அது ஒரு நாட்டின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வழிமுறை மட்டுமேயாகும். நேற்றைய தலைமுறையினருக்கு, இன்றைய தலைமுறையினரின் தேவைகள் எவையென்று தெரிந்திருக்க முடியாது. "நேற்றைய தினம்" என்பது "இன்றைய தினத்தை" வலுவிழக்கச் செய்யக்கூடாது. ஒவ்வொரு தலைமுறையினரும் தமது தேவைகளுக்கேற்ப வழிமுறைகளை வகுத்துக்கொள்ள அனுமதிப்பதே சிறந்தது.

**சோ. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியில் சங்மாவை சேர்த்திருக்கிறார்கள் இல்லையா? அவர் காங்கிரஸ் தலைவர் திருமதி. சோனியா காந்திக்கு பரம எதிரியாக இன்று கருதப்படுபவர். அவரைச் சேர்த்தது எந்த வகையில் நியாயம்? அதை ஏன் நீங்கள் எதிர்க்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விரிவான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தை எந்த

வகையிலேயும் மாற்றக்கூடாது என்று சொல்லப்படுகின்ற வாதங்களுக்கு பதிலாக அது அமைந்திருக்கக்கூடும். அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டும்தான். ஆனால் சமூக வளர்ச்சியின் தேவைக்கு தக்கபடி முற்போக்கான திசைவழியில் மாற்றுவதா? அல்லது சமூகச் சக்கரத்தை பின்னுக்கு இழுக்கிற முறையில் மாற்றுவதா என்பதுதான் கேள்வி. மத்தியிலே இருக்கிற பி.ஜே.பி. அரசு ஒருபோதும் சமூகத்தை முன்னுக்கு கொண்டு போகிறபடி சிந்திக்காது என்பதால் அவர்கள் அப்படி மாற்ற மாட்டார்கள் என்ற அச்சத்தைத்தான் நாங்கள் தெரிவித்தோமே தவிர வேறு அல்ல.

**ச. அழகிரி :** பேரவைத் தலைவர் அவர்கள், முதல்வர் அவர்கள் சோவியத் ரஷ்யாவில் 4 முறை அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டதைப் பற்றி சொன்னார்கள். அந்த தேசத்தை உருவாக்கியவர்கள், புரட்சி செய்தவர்கள்; அவர்கள் அந்தச் சட்டத்தை மாற்றி அமைத்தார்கள். சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டு வரலாம். ஆனால் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைத்தான் நாங்கள் சொன்னோம்.

## அரசியல் சட்டத்தின் அடிப்படை மாற்றப்படக் கூடாது என்றுதான் கூறிக் கொண்டிருக்கிறேன்

**முதல்வர் கலைஞர் :** 'விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு இராமன் சித்தப்பா' என்று சொன்னதாக ஒரு பழமொழி உண்டு. அதேபோல, அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றப்படக்கூடாது என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் இந்தக் குழுவும் போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சங்மாவை சேர்க்கலாமா என்று கேட்டார்.

**ஜே. ஹேமச்சந்திரன் :** அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான ஒரு கமிட்டி உருவாக்குகிற நேரத்தில் அதுவும் நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்டு, நாடாளுமன்றம் நிறைவேற்றுகிற குழுவாக அமைவதுதானே அது சிறந்ததாக இருக்கும் என்பதை முதல்வரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர் :** நான் இப்போது சதாவதானம் எடுத்து 4 கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். அழகிரி கேள்விக்கு பதில் சொல்லிவிட்டேன். எதிர்க்கட்சித் தலைவர் சங்மாவை சேர்க்கலாமா என்று கேட்டார்கள். கமிட்டியிலே யாரைப் போடுவது என்பது பற்றியல்ல நாம் இப்பொழுது பேசிக்கொண்டிருப்பது. இப்பொழுது நாம் சொல்லிக் கொண்டிருப்பது அரசியல் சட்டத்திற்கு மாறுதல் தேவையா, இல்லையா என்ற வாதத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கமிட்டியிலே போடுபவர்களைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம்.

## நல்லமுறையில் மாற்றப்பட்டால் ஆதரிப்போம் இல்லையென்றால் எதிர்க்கப் போகிறோம்

சுப்பராயன் அவர்கள் இது முற்போக்காக மாற்றப்பட வேண்டுமே என்று சொன்னார்கள். எப்படி மாற்றப்படும் என்று இப்பொழுது நான் ஒன்றும் ஜோசியம் சொல்ல முடியாது. இது நல்லமுறையில் மாற்றப்பட்டால் நாம் ஆதரிக்கப்போகிறோம், இல்லையென்றால் எதிர்க்கப்போகிறோம். நாமெல்லாம் மிக விழிப்போடு இருந்து அதை கவனித்துக்கொண்டு இருக்கப் போகிறவர்கள். அதனால் இது நமக்கு தீங்கு அளிக்கக்கூடிய முறையில் சிறுபான்மை சமுதாயத்திற்கோ அல்லது நம்முடைய ரிசர்வேஷன் போன்ற கொள்கைகளுக்கோ எதிரானதாக அடிப்படையை மாற்றக்கூடியதாக இருந்தால் நாம் வன்மையாகக் கண்டிக்கப்போகிறோம் என்பதிலே எள்ளளவும் சந்தேகம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தைக் கூட்டி அல்லவா கமிட்டி போட்டு இருக்கவேண்டும் என்று கேட்டார்கள். இந்தச் சட்டம் அந்தக் கமிஷனால் ஆலோசிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு வந்த பிறகு நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமல் அது நிறைவேற முடியாது. கடைசி எல்லை நாடாளுமன்றம்தான். அப்படி இருக்கும்போது நாம் அஞ்சத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதை மாற்றும்போது ஒழுங்காக மாற்றப்பட வேண்டும் என்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து. அடிப்படை மாறாமல் மாற்றப்பட வேண்டுமென்பது தான் இங்கே சொல்லப்பட்ட கருத்து.

ஆனால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அதி.மு.க. தலைவி அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில், "அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு தனிப்பட்ட கட்சி நலனுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. இது பி.ஜே.பி. கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது தேசிய ஜனநாயகக் கூட்டணியிலுள்ள மற்ற கட்சிகளாக இருந்தாலும் சரி, அவற்றின் நலனுக்காக அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றக்கூடாது. அரசியல் சட்டம் உண்மையிலேயே புனிதமானது. (அதிலே மாறுபட்ட கருத்து எல்லோருக்கும் உண்டு. அது புனிதமானதா, அல்லவா என்பது. புனிதமானதாக இருந்தால் 80 முறை அதில் கைவைத்திருக்க மாட்டார்கள் அதைத் திருத்துவதற்கு) அவசரப்பட்டு எதுவும் செய்யக்கூடாது. மிகவும் கவனமாகவும், ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் மாற்றம் செய்ய வேண்டும். ஆட்சியில் இருக்கும் ஒரு அரசியல் கட்சியின் சலனத்தால் கருத்துக்கும், கற்பனைக்கும் ஏற்ப அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்யக்கூடாது"

— என்று அம்மையார் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள்.

## அரசியல் சட்ட மாற்றம்; கொள்கையில் முரண்பாடு

ஆனால் அதே அம்மையாரைத் தலைவராகக் கொண்ட அ.தி.மு.க. கட்சி *24–9–1996* அன்று அவர்களுடைய பொதுக் குழுவிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

"தற்போதுள்ள ஆட்சி முறையில் தக்க மாற்றம் கொண்டுவந்து, நாட்டின் ஜனாதிபதியிடம் முழு அதிகாரம் வழங்கப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதியைப் போன்று, ஜனாதிபதியை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை அமைய வேண்டுமென்றும், அதற்கேற்ப அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் இப்பொதுக்குழு கோருகிறது. அதே நிலையில் மாநிலங்களின் ஆளுநர் பதவிகளெல்லாம் நீக்கப்பட்டு, மாநில ஆட்சித் தலைவர் மாநில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை உருவாக்கத் தேவையான மாற்றங்களை அரசியல் சட்டத்தில் செய்ய வேண்டுமென்று இப்பொதுக்குழு கோருகிறது".

என்னென்ன மாற்றமோ, அது வேறு விஷயம். ஆனால் அரசியல் சட்டத்திலே மாற்றங்கள் செய்யலாம் என்று *1996*ஆம் ஆண்டு பொது குழுவிலே தீர்மானித்துவிட்டு, இப்பொழுது மாற்றவே கூடாது என்று கூறுகின்ற அந்த விபரீதமான முரண்டுபாடுகளும் இன்றைக்கு நாட்டிலே காணப்படுகிற காட்சிகளாக அமைந்திருக்கின்றன.

இன்னொன்று, இதன் தொடர்பாகப் பேசிய பிரச்சினைகளில் மிக முக்கியமானது; ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை. ஏதோ என்னையே ஒரு ஆர்.எஸ்.எஸ். என்பதுபோல் சிலபேர் இங்கே உருவகப்படுத்திப் பேசினார்கள்; அல்லது கருதிக் கொண்டு தங்களுடைய வாதத்தை இங்கே எழுப்பினார்கள். நாங்கள் முஸ்லிம் லீகை ஆதரித்தபோது எங்களையெல்லாம் வகுப்புவாதிகள் என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள்; முஸ்லிம் லீகோடு நாங்கள் உறவு கொண்டிருந்தபோது — இப்போது அல்ல, ஜின்னா காலத்திலேயே சொல்லுகின்றேன். அந்தக் காலத்தில் இருந்தே, ஜின்னா, அண்ணா என்று பேசப்பட்ட அந்தக் காலத்திலேயே முஸ்லிம் லீகில் சேர்ந்தவர்கள் எல்லாம் வகுப்புவாதிகள் என்று நாங்கள் அன்றைக்கு புறக்கணிக்கப்பட்டோம் ஆர்.எஸ்.எஸ்க்கு ஒன்றும் நான் வக்காலத்து வாங்க விரும்பவில்லை. இருந்தாலும் பழைய அரசியல் வரலாறுகளை நினைவூட்டுவது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்பதால் நினைவூட்ட விரும்புகின்றேன்.

## ஜனசங்கம் இருந்த அரசில் சி.பி.ஐ.அங்கம் வகித்தது

*1967*ஆம் ஆண்டு தேர்தல் முடிவுக்குப் பிறகு பஞ்சாப், உ.பி., பீகார் ஆகிய *3* மாநிலங்களிலும், அகாலிதளம், பாரதிய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி அரசில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஜனசங்கம் என்பது ஆர்.எஸ்.எஸ். கட்சியினுடைய நிழல் என்று சொல்லப்படுகின்ற ஜனசங்கம், பாரதிய கிரந்திதளம், அகாலிதளம் ஆகிய இந்தக் கட்சிகள் எல்லாம் பங்குபெற்ற அரசில் சி.பி.ஐ. கட்சி அங்கம் வகித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அணியிலே பங்குபெற மறுத்துவிட்டது. ஆனால் அந்த அரசுகளுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவை அளிக்க மார்க்சிஸ்ட் கட்சி ஒப்புக்கொண்டது. இது, *1967*இல் சட்டசபை தேர்தல் எல்லாம் முடிந்த பிறகு!

**கே.சுப்பராயன் :** முதல்வர் அவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒரு மாநிலக் குழு தீர்மானித்தது அப்படி பங்குபெற்றது தவறு என்று மத்திய தலைமை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே, அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அதிகாரபூர்வமான கருத்தாக எடுத்துக் கொள்ள இயலாது.

**முதல்வர் கலைஞர் :** நான் அந்த அரசில் இவர்கள் அங்கம் வகித்தார்கள் என்றுதான் சொன்னேன். அது மாநிலக் குழுவா, மத்தியக் குழுவா என்பதெல்லாம் அல்ல. அப்படிப்பட்ட ஒரு அரசில் சி.பி.ஐ. அங்கம் வகித்தது என்பதுதான்; ஜனசங்கம் இருந்த அரசில்,

பிறகு, *1977*இல் நடந்த தேர்தலில் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையிலே ஜனதா அரசு அமைந்தது. ஜனதாவிலே இடம் பெற்ற கட்சிகளில் ஒன்று ஜனசங்கம் என்பதை அனைவரும் அறிவீர்கள். அந்த அரசில் வாஜ்பாய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள். மார்க்சிஸ்ட் கட்சி வெளியேயிருந்து அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

*1989–90*இல் வி.பி.சிங் தலைமையிலே மத்தியில் ஆட்சி. அப்போது சி.பி.எம்., பா.ஜ.க. இரண்டுமே வெளியே இருந்து வி.பி.சிங் ஆட்சியை ஆதரித்தார்கள். அத்துடன், பல மாநிலங்களில் மைனாரிட்டி பலத்தோடு அமைந்த ஜனதா அரசுகளையும் பா.ஜ.க. ஆதரித்தது. என்னவோ, தி.மு.க.மாத்திரம் தான் ஜனசங்கத்தை அல்லது ஆர்.எஸ்.எஸ்.ஐ ஆதரிப்பதாகச் சொல்லி, ஆர்.எஸ்.எஸ்.ஐ. நாங்கள் ஆதரிக்காத காலத்தில்கூட, பி.ஜே.பி.ஐ. ஆதரிக்கின்ற காரணத்தினாலேயே நாங்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்.ஐ. ஆதரிக்கிறோம் என்று சொல்லி குற்றம் சாட்டுகின்ற அந்தத் தன்மைக்காகத்தான் இந்த சரித்திரத்தை நான் எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

நம்முடைய அழகிரி அவர்கள், பெரியாருடைய கொள்கையிலும், அண்ணாவினுடைய கொள்கையிலும் நாங்கள் திடமாக இருக்க வேண்டும் என்பதில் ரொம்ப அக்கறையாக இருக்கிறார். பெரியாருக்கே அந்த அளவுக்கு அக்கறை இருக்குமோ, இருக்காதோ; அண்ணாவிற்கே அந்த அளவிற்கு அக்கறை இருக்குமோ இருக்காதோ; அவ்வளவு அக்கறையாக இருக்கிறார். மூப்பனார் கூட சொன்னார். கருணாநிதி செய்கின்ற இந்த வேலையைப்

பார்த்து பெரியாரும் அண்ணாவும் இருந்திருந்தால் ரத்தக் கண்ணீர் வடிப்பார்கள் என்று சொன்னார். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. குத்தூசி குருசாமி – விடுதலையிலே பலசரக்கு மூட்டை என்ற தலைப்பிலே எழுதுவார். அதிலே அவர் எழுதியிருந்தார். திராவிடக் கழகத்துக்காரர்கள், பெரியார், இவர்கள் கட்டைவிரல்களை எல்லாம் வெட்ட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் பேசிய காலத்தில் குத்தூசி குருசாமி, பலசரக்கு மூட்டை என்ற தலைப்பில் விடுதலையில் எழுதிய அந்தக் கட்டுரை எல்லாம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

## பராசக்தி படம் என்ன பாடுபட்டு வந்தது? எத்தனை முறை தடை விதிக்கப்பட்டது?

"வாட்டர்" படத்தைப் பற்றிச் சொன்னார்கள்; என்னவோ இங்கே எல்லாம் தாராளமாக படம் எடுக்கிற மாதிரி. பராசக்தி படத்தைப் பற்றிச் சொன்னார்கள்; பராசக்தி படம் என்ன பாடுபட்டு வெளியே வந்தது, எத்தனை முறை அதற்கு தடை விதிக்கப்பட்டது; பராசக்தி படம் வந்தபோது காங்கிரஸ் நண்பர்கள் தெருவுக்குத் தெரு கூட்டம் போட்டு கண்டனம் செய்தார்கள். நம்முடைய நண்பர் சின்ன அண்ணாமலை அவர்கள் பராசக்தி எதிர்ப்புக்காக ஒரு அணியை அமைத்து தெருவுக்குத் தெரு, சென்னையிலும் சரி, திருச்சியிலும் சரி, கோவையிலும் சரி கூட்டம் போட்டு என்ன சொன்னார்கள் தெரியுமா? பராசக்தி படம் பார்க்கிற தியேட்டருக்கு பெண்களே நீங்கள் எல்லாம் கையில் துடைப்பக்கட்டையோடு செல்லுங்கள் என்று பேசினார்.

மறைந்துவிட்டார்; இருந்தாலும் அவர் பேசிய பேச்சு ஞாபகத்தில் இருக்கிறது. நான் அவரை ஒன்றும் இப்போது குறை சொல்ல விரும்பவில்லை. அந்த அளவிற்கு பராசக்தி படத்திற்கு எதிர்ப்பு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது தடை செய்யப்படும்; தடை செய்யப்படவேண்டும் என்றெல்லாம்கூட சொல்லப்பட்டது. ஒரு வாரப் பத்திரிகையில் பராசக்தியைத் தாக்கிப் பேசுவதை எழுதவே ஒரு அட்டைப் படமே போட்டார்கள். பரப்பிரம்மம் என்று போட்டு, ஒரு நிர்வாணப் பெண்ணை அந்த அட்டைப் படத்திலே போட்டு, பரப்பிரம்மம்; கதை வசவு தயாநிதி என்றே அதைச் சித்தரித்தார்கள்; அந்த அட்டைப் படத்திலே. அந்த அளவுக்கு எதிர்ப்பு பராசக்தி வந்தபோது இருந்தது. அதைப் போல, சொர்க்கவாசல்; சொர்க்கவாசல் படத்திலே ஒரு பாட்டு, உடுமலை நாராயணக்கவியுடைய பாட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது அறிந்து
சொல்வீரே;
நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

— என்று ஒரு பாட்டு. அது சென்சாரிலே அப்போது வெட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது; அறிந்து
கொள்வீரே;
நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

— என்ற அந்த வரிகள் சென்சாரிலே அப்போது வெட்டப்பட்டது. அதற்குப்பிறகு அந்தப் பாட்டை நாராயணக்கவி மாற்றி எழுதிக் கொடுத்தார்.

"ஆகும் நெறி எது; ஆகா நெறி எது, அறிந்து கொள்வீரே, நன்றாய்ப் புரிந்து கொள்வீரே" என்று எழுத வேண்டிய நிலைமை அன்றைக்கு இருந்தது.

## காஞ்சித் தலைவன் படத்தில் 'வெல்க காஞ்சி' என்பதை 'வெல்க நாடு' என்று மாற்றச் சொன்னார்கள்

காஞ்சித் தலைவன் படத்திலே வாதாபி என்று ஓர் ஊர். காஞ்சிபுரம் என்று ஓர் ஊர். இரண்டு ஊருக்கும் சண்டை வாதாபியிலேயிருந்து படையெடுத்து வருகிறவன், "வெல்க வாதாபி, வெல்க வாதாபி" என்று சொல்லிக் கொண்டு வருகிறான். காஞ்சிபுரத்தி லேயிருந்து படையெடுத்து கொண்டு வருகிற நரசிம்மவர்மன், "வெல்க காஞ்சி; வெல்க காஞ்சி" என்று சொல்லி வந்தான். வெல்க காஞ்சி என்று சொன்னால், அது அண்ணாவைக் குறிக்கும் என்று சென்சார் வெட்டி விட்டார்கள். அதை மாற்றிப் போடச் சொல்லி "வெல்க நாடு; வெல்க நாடு" என்று, அதுவும் நாடுதான். இதுவும் நாடுதான். எந்த நாடு வெல்வது, இருந்தாலும், வெல்க நாடு என்று மாற்றிப் போடச் சொன்னார்கள்.

திரும்பிப்பார் படத்திலே, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே, திரும்பிப் பாருங்கள்; அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்" இது ஒரு வசனம். அது வெட்டு; ஏன் என்று கேட்டால், சென்சார் ஆபீசர் சொல்கிறார். திருக்கோஷ்டியூர் கோவில் கோபுரத்திலே இராமானுஜச்சாரியார் ஏறி நின்று, கீழே குதித்து விழுந்து செத்துப் போய்விட்டார். அதனாலே நீ அவரைக் கிண்டல் பண்ணுகிறாய் என்று சொன்னார். நான் எழுதியது, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே, அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்; திரும்பிப் பாருங்கள்" அதை ஏற்றுக் கொள்ளவில்லை அன்றைக்கு இருந்த சென்சார். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையிலேதான் அப்போது படம் வெளிவர முடிந்தது. இப்போது உள்ள இந்தக் கஷ்டங்களைப் பார்க்கும்போது அந்தக் கஷ்டங்களெல்லாம் சாதாரணமானவை என்று யாரும் கூறிவிட முடியாது.

**ச. அழகிரி :** எவ்வளவு சிரமங்கள் இருந்தபோதும், பராசக்தி படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி பராசக்தி படத்தை நீங்கள் எடுப்பதற்கு அனுமதி மறுக்கவில்லை; தடை செய்யவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கிற பாரதீய ஜனதா அரசாங்கம், 'வாட்டர்' படத்தை எடுப்பதற்கே இங்கே அனுமதிக்கவில்லை.

**கருத்து சுதந்திரம் என்ற பெயரால் மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்தவும் கூடாது**

**முதல்வர் கலைஞர் :** பிரச்சினை அது அல்ல. அரசாங்கம் அனுமதித்து ஒரு சாரார் அதை எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான் பிரச்சினை. அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. வெளிநாட்டுக்காரர் வந்து படம் எடுக்கிறார். அதை இந்திய அரசாங்கம் அனுமதித்துவிட்டது. அதாவது, பி.ஜே.பி. அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்று சொல்வது தவறு. அனுமதித்து விட்டது. இங்கே உள்ளவர்கள் அது அவர்களைப் புண்படுத்துகிறது என்று சொல்லி, எதிர்க்கிறார்கள். நான் சொல்வது, கருத்து சுதந்திரத்தை எதிர்ப்பது முறையல்ல என்பதில் நான் அழகிரியோடு ஒத்துப் போகிறேன். அதே நேரத்தில் கருத்து சுதந்திரம் என்ற பெயரால், எல்லாவற்றையும் சொல்லி, மற்றவர்களின் மனதைப் புண்படுத்துவதும் கூடாது. அதையும் மறந்துவிடக் கூடாது. இந்து மதத்திலே உள்ள சில தவறான நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகளையெல்லாம் ஒரு இந்துவைக் கொண்டு சொன்னால், அது விஷயம் வேறு. அதை இன்னொரு மதத்தைச் சேர்ந்தவரைக் கொண்டு சொன்னால் அந்த விஷயம் வேறு. இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். விரிவாக நான் இதைப் பற்றிப் பேசுவது நல்லதல்ல என்பதால் விட்டு விடுகிறேன்.

**தீரன் :** சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புகின்ற படங்களுக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தடை விதிக்கப்பட்டது என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 'வாட்டர்' திரைப்படம், ஒரு விதவையான இந்துப் பெண், தவறான வழியிலே நடப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறாள். அதிலிருந்து மீண்டு, அவள் ஒரு பொதுக் காரியத்திலே ஈடுபடுகின்ற ஒரு சிறப்பான செயலாக, ஒரு தாழ்த்தப்பட்ட சகோதரனை மணந்து கொள்கிற வகையிலே கதை போகிறது. இப்படிப்பட்ட ஒரு படமும், ஒரு சீர்திருத்த, புரட்சிகரமான படம்தான். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எந்த வகையில் நியாயமானது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் குமாரதாஸ் சொன்ன கருத்து தவறான கருத்து**

**முதல்வர் கலைஞர் :** இதே கேள்வியை நானும் கேட்டிருக்கிறேன். அதனால், எனக்கு முரண்பாடான கேள்வியை தீரன் அவர்கள் கேட்கவில்லை.

இங்கே உரையாற்றிய நமது குமாரதாஸ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தேசத்தைப் பற்றிய, தேசத்தின் பாதுகாப்பைப் பற்றிய ஒரு குற்றச்சாட்டு. அதனால் நான் பதில் சொல்லியே ஆகவேண்டும். அவர்கள் சொன்னார்கள், "தமிழ்நாட்டினுடைய சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சுமார் 3 தினங்களுக்கு முன்பு மேற்கு பகுதியினுடைய இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் சென்னைக்கு வருகைத் தந்து ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். நீங்கள் இந்த விஷயத்தை மிகக் கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வழியாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று டாக்டர் குமாரதாஸ் அவர்கள் அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். உண்மையிலேயே லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் அவர்கள் அப்படிப் பேசவில்லை என்பதுதான் உண்மை. **4—3—2000** அன்று சென்னை இராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாடமியில் நடைபெற்ற பயிற்சி நிறைவு ஆண்டு அணிவகுப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார். அப்போது "நமது நாட்டைச் சீர்குலைக்க பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. பல்வேறு வகைகளிலும் சதி செய்து வருகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

**''Pakistan's ISI was trying to destabilise India, Oberoi said''** என்று **The New Indian Express, Chennai, 5-3-2000** அன்று வெளிவந்தது. பி.டி.ஐயில் கூட.

**''Lt.Gen.Oberoi said forces like the Pakistani Inter-services Intelligence were going all out to destabilise the country in various ways and hence the armed forces had always to be fully on the guard''** என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார். இதுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது. எனவே பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வாயிலாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று சொன்னதாக நம்முடைய டாக்டர் குமாரதாஸ் சொன்ன அந்தக் கருத்து தவறான கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மறுக்கப் போகிறீர்களா?—

**டாக்டர் தே. குமாரதாஸ் :** நான் நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே வேறுபடவில்லை. ஆனால் ஒரு கருத்து. இராணுவத் தளபதி இங்கிருந்து பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு தமிழ்நாடு வழியாக கடத்தினார் என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் நான் திருத்திக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் கடைப்பகுதி நெல்லை மாவட்டம் சாத்தான் குளம், திருச்செந்தூர் ஆகியப் பகுதிகளிலே கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கிட்டத்தட்ட 100 முதல் 200 கோடி ரூபாய் போதைப் பொருள்கள் பிடிபட்டிருக்கிறது என்பது பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வந்த செய்தி. அவைகள் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு விடுதலைப் புலிகளின் மூலமாக கடத்தப்படுவதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலே விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இந்தப் பகுதியிலே இருக்கிறது. போதைப் பொருள்கள்

கடத்துகிற ஒரு பகுதியாக தமிழ்நாடு அமைந்துவிடக்கூடாது என்ற உணர்வின் அடிப்படையிலே சொல்லப்பட்டது. போதைப்பொருள்கள் அப்படி கடத்தப்படுகிற செய்திகள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### எதிர்க்கட்சியில் இருந்தபோது ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறேன்

**முதல்வர் கலைஞர் :** தங்களுடைய கருத்தாக சொன்னால் தவறு இல்லை. ஒரு லெப்டினென்ட் ஜெனரல் ஒபராய் அவர்கள் சொன்ன கருத்தாக சொன்னால்தான் தவறு என்று நான் குறிப்பிடுகிறேன். இது தங்களுடைய கருத்தாக இருக்குமேயானால் அதற்கும் என்னிடத்திலே பதில் இல்லாமல் இல்லை.

மத்திய அரசினுடைய வருவாய்த் துறை, நுண்ணறிவுப் பிரிவினரும், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினரும் மத்திய சுங்கத்துறை அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டத்தை மத்திய உளவுப் பிரிவினரும், மாநில க்யூ பிராஞ்ச் பிரிவினரும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள் என்பதையும் அதனால்தான் கடத்தப்பட்ட பொருள்கள் எல்லாம் பிடிபட்டிருக்கின்றன என்ற செய்தியைக் கூட தாங்களே சொல்கிறீர்கள் என்பதையும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாங்கள் சொன்னதற்காக அல்ல. குறிப்பாக குற்றச் சாட்டுக்களைச் சொல்வது தவறு அல்ல. எப்படி குறைகளைச் சொன்னால் அதைக் களைய வேண்டுமோ அதைப்போல குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் விசாரித்து அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது ஒரு ஜனநாயக அரசினுடைய தார்மீக கடமையாகும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்பது ஒரு முறை. ஆதாரமே தேவையில்லை என்று ஒரு வாதம் எழுப்பப்பட்டு தலைவராகிய தாங்கள் அதற்கு தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். எனவே அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை.

பொதுவாக நான் இந்த அவையிலே எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த போது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதிலும் சரி, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும் சரி குறைகளையும் சொல்லியிருக்கிறேன். குற்றச்சாட்டுக் களையும் எடுத்து வைத்திருக்கிறேன். ஆனால், ஆதாரங்களோடு அந்தக் குற்றச்சாட்டுக்களை எடுத்து வைத்திருக்கிறேன்.

ஒருமுறை, மின்சார வாரியத்திற்காக எருக்கஞ்சேரியிலே நிலம் வாங்கியதிலே நடைபெற்ற ஊழலை விஸ்தாரமாக விவரித்துப் பேசும்போது அப்போது மின்வாரியத் துறை அமைச்சராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் எழுந்து, "என்ன ஆதாரங்களோடு பேசுகிறீர்கள்" என்று கேட்டார். "ஆதாரங்களை நான் அவைத் தலைவரிடத்திலே கொடுத்திருக்கிறேன். இப்போதும் தருகிறேன்" என்று சொல்லி அது சம்பந்தமான எல்லா பத்திரங்களையும் எடுத்து மேசை மீது வைத்தேன். அதை வாங்கிக்கொண்டு, நாளை விசாரித்து, அதைப்பற்றிப் பேசுகிறேன் என்று ஆர்.வி. அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அதை ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு விசாரிக்கப்பட்டது. விசாரிக்கப்பட்டு நான் சொன்ன குற்றச்சாட்டு உண்மைதான் என்று நிரூபிக்கப்பட்டது.

### ஆதாரத்தோடு குற்றம் சாட்டியபோது எம்.ஜி.ஆர். அளித்த பதிலுரை

அதேபோல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, பல்கேரியா பால்டிகா கப்பல் பேரத்தில் நடைபெற்ற சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஒன்று, இரண்டு, மூன்று என்று இருபது ஆதாரங்களை இதே அவையிலே, இந்த இடத்திலே நான் எடுத்துவைத்துப் பேசினேன். அன்று பதிலளிக்க வேண்டிய எம்.ஜி.ஆர். அவர்கள், அவருடைய பதிலுரையை அன்றைக்கு நிகழ்த்தாமல் நாளைய தினம் நிகழ்த்துகிறேன் என்று சொல்லிவிட்டு மறுநாள் வந்து அந்தப் பதிலுரையை நிகழ்த்தினார்கள். அப்போது சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துவைத்த அந்த ஆதாரங்களையொட்டி அந்தக் கப்பல் வாங்குகிற அந்த முயற்சி கைவிடப்பட்டு விட்டது என்று அவர்கள் சொன்னார்கள். எனவே, எதற்கும் ஆதாரங்களை எடுத்து வைத்துப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், வேறல்ல.

ஆனால் இங்கே ஒரு கடத்தலைக் கண்டு பிடித்துவிட்டோம் என்பதற்காக பதவி விலகுங்கள் என்று சொன்னதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு கடத்தலைக் கண்டுபிடித்து, வெறும் டிரைவரை அல்ல, சாதாரண அப்பாவி ஆட்களை அல்ல, அதற்கு மூலகர்த்தாக்களாக இருந்தவர்களையே கைது செய்து, அவர்களுக்குச் சொந்தமான 5 லாரிகளையும் பறிமுதல் செய்து, வழக்கைத் தீவிரமாக நடத்துகிறோம். புலன் விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, 'நீங்கள் பதவி விலகுங்கள்' என்று அவசரப்பட்டுச் சொல்வது, வெறும் அரசியலுக்குத்தான் பயன்படுமேயல்லாமல் அது ஆக்கபூர்வமான ஒரு காரியமாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

பக்குவத்திற்கும், அமைதிக்கும் பெயர் பெற்ற பழனிச்சாமி கூட, அதைச்சொன்னால்தான் தன்னுடைய பேச்சு வேகம் என்று எண்ணிக் கொள்வார்கள் என்பதைப்போல, 'நேரு உடனடியாக பதவி விலக வேண்டும்' என்று சொன்னார். நேரு பதவி விலக வேண்டுமென்று நேரு காலத்திலிருந்தே சொல்லப்படுகிற விஷயம்தான். ஆனால் ஒரு

குற்றத்தைக் கண்டுபிடித்து கைது செய்ததற்காக, அந்தக் கடத்தலைத் தடுத்து நிறுத்தியதற்காக, பறிமுதல் செய்ததற்காக, அதைச் செய்தவர்களை உடனடியாக பதவி விலக வேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதற்காகச் சொல்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார் :** நேற்று இந்த பிரச்சினையிலே விளக்கம் தருகிற போது, அமைச்சர் அவர்கள், 1996–97ஆம் ஆண்டு, 1997–98ஆம் ஆண்டு என்று ஆண்டு வாரியாக புள்ளி விவரங்களைத் தந்தார்கள். 1996–97ஆம் ஆண்டு கோடிக் கணக்கான ரூபாய் அரிசி கடத்தப்பட்டது என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், 2000–2001ஆம் ஆண்டிலே இந்தத் தவறு நடந்திருக்கக் கூடாது.

**முதல்வர் கலைஞர் :** உங்கள் திருப்திக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம்.

**பி.ஆர்.சுந்தரம் :** இந்த உணவுக் கடத்தலிலே, சி.பி.சி.ஐ.டி. விசாரணை வைத்திருக்கிறீர்கள். அரிசி வாங்கிய ஜெகதீசன் என்பவரை இதுவரை பிடிக்கவில்லை. ஆகவே, இதில் நீங்கள் நீதி விசாரணை நடத்தவேண்டும்.

**மு. அப்பாவு :** முதலமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்றுக் கொள்கிறேன். இந்து பத்திரிகையிலே, மத்தியிலே, ஆட்சி செய்கின்ற மத்திய உணவுத் துறையினுடைய உயர் அதிகாரியே, தமிழகத்தில் மத்தியத் தொகுப்பிலிருந்து எடுக்கப்படுகின்ற அரிசியில் பெரும்பகுதி வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது என்பதை அவரே சொல்லும்போது, இந்த ஆதாரம் போதாதா? என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர் :** அப்படி விற்கப்பட்ட, எடுக்கப்பட்ட, கடத்தப்படுகிற அரிசியெல்லாம் பிடிக்கப்படுகிறது. அந்த விவரத்தைத்தான், தன்னுடைய உரையில் இறுதியாக, நம்முடைய அமைச்சர் நேரு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியிலே, அவர் சொன்ன வார்த்தைகள், அரிசி கடத்தல்கள் அப்போதும் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், அப்போது வழக்குகள் போட்டு பொருட்களைக் கைப்பற்றினார்களே தவிர, ஒருவரைக்கூட, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கவில்லையென்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், கழக அரசில் நான்கு ஆண்டு காலத்தில் 14 பேரை, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைத்திருக்கின்றோம். ஜெயலலிதா ஆட்சியில் 18,871 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கழக ஆட்சியில் 16,991 வழக்குகள். கடத்துவது ஒரு மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். 100 மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். இது வழக்குகளினுடைய எண்ணிக்கை. ஆனால், இந்தக் கடத்தலிலே சம்பந்தப்பட்டவர்கள் யாரையும் தண்டிக்கின்ற, சிறையிலே அடைக்கின்ற காரியங்கள் கடந்த ஆட்சியில் நடைபெறவில்லை, இந்த ஆட்சியிலேதான் அந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

29.11.1999 அன்று அப்பாவு சொன்ன அதே இந்து பத்திரிகையிலே தான் எழுதியிருக்கிறார்கள்.

"பொது விநியோகத்தில் சாதாரண ரக அரிசியை நிறுத்திய அரசின் அறிவிப்பால் இதுவரை அதைவேறு வகையிலே விநியோகித்துப் பலன் பெற்றவர்களுக்குத் தான் பாதிப்பே தவிர, குடும்ப அட்டைதாரர்களுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது என்று அந்த ஏழை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன"

– என்று இந்து எழுதுகிறது. அதை ஏற்றுக் கொண்டால் இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, அப்பாவு அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ, இங்கே அரிசி விலை ஏறிவிட்டது, விலை ஏறிவிட்டது என்று ஒரு பிரச்சாரம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம் என்று கூறுகிறார்கள். முன்பு மூன்று கிலோ 2 ரூபாய் வீதம் கொடுத்தோம். அது 6 ரூபாய். 17 கிலோ ரூ.3.75 வீதம் கொடுத்தோம். அது ரூ.63.75 காசு. ஆக மொத்தம் ரூ.69.75 செலவழித்த ஒருவன், இப்போதுள்ள 20 கிலோ அரிசியும் ரூ.3.50 காசு வீதம் கொடுக்கும் போது 70 ரூபாய் தான் செலவழிக்கிறான். அதிகமாக 25 பைசா தான் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் 20 கிலோ அரிசியும் நல்ல அரிசியாக கிடைக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

## அரிசி விலையை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

மாநிலத்தினுடைய ஒப்பீடுகளைப் பார்த்தால்; மேற்கு வங்கத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 5 ரூபாய், கிலோ அரிசி; மேலே உள்ளவர்களுக்கு 10 ரூபாய் 40 காசு. எவ்வளவு கிலோ தருகிறார்கள் என்றால் ஒருவருக்கு 2 கிலோ அரிசி தான் கொடுக்கிறார்கள்.

கர்நாடகத்திலே 10 கிலோ அரிசி தான் கொடுக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு ரூ.3.50; மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.80.

கேரளாவிலே வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ளவர்களுக்கு ரூ.3.90; மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.60, மொத்தம் கொடுக்கிற அரிசி 10 கிலோ தான்.

ஆந்திராவிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே ரூ.3.50 மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.50, 20 கிலோ தருகிறார்கள்.

தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கும் மேலேயுள்ளவர்களுக்கும் 3.50 ரூபாய் வீதம் 20 கிலோ அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னால் அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் குறைக் கூறுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

அப்பாவு இன்னொன்று சொன்னார். கோவில்பட்டியில் ஒரு அதிகாரி. டி.எஸ்.ஓ. அவருடைய சாவைப் பற்றிச் சொன்னார். அதைப்பற்றி நான் விசாரித்தேன். ஏற்கெனவே அது பற்றி தகவல்கள் வந்திருக்கிறது என்னிடம் மீண்டும் அதை விசாரித்து, உறுதிப்படுத்திக் கொண்டேன். கோவில்பட்டி வட்ட வழங்கல் அதிகாரி, டி.எஸ்.ஓ. ராஜகோபால் 7.1.98 அன்று, இரண்டு வருடங்களுக்கு முன்பு, இப்போதுள்ள பிரச்சினைகளோடு அப்பாவு இதைச் சேர்த்துப் பேசினார். இது 1998—ஆம் ஆண்டு பிரச்சினை. 98—இல், தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது பற்றி கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய எண்.21/98, பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்களும் மற்றவர்களும் புகார் கூறியதால் இவ்வழக்கு 302 ஐ.பி.சி. பிரிவாக மாற்றப்பட்டு, சி.பி., சி.ஐ.டி. விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

15.2.1999 அன்று இவ்வழக்கு தற்கொலை தான் என்று முடிவு செய்யப்பட்டது.

3.1.98 அன்று TCG 9805 TSF 5254 என்ற இரு லாரிகள் அருப்புக்கோட்டையில் இருந்து அரிசி ஏற்றிச் செல்லும் போது எட்டையபுரத்தில் அவை ராஜகோபால் மற்றும் அதிகாரிகளால் மறிக்கப்பட்டு பின்னர் கோவில்பட்டி அரிசி வியாபாரி பழனிசெல்வம் மூலம் 13 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொண்டு ராஜகோபால் அந்த லாரிகளை விடுவித்துள்ளார்.

6.1.1998 அன்று அருப்புக்கோட்டை அரிசி வியாபாரிகள் கோவில்பட்டி கோட்டாட்சியரிடம் இதுகுறித்து புகார் செய்யவே — கோட்டாட்சியர், ராஜகோபாலை அழைத்து பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தியுள்ளார்.

ஏற்கெனவே 81—ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கில் சிக்கி சிரமத்திற்கிடையே இருந்த ராஜகோபால் எவ்வாறாவது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணி முயற்சி செய்ததாகவும், ஆனால் பணத்திற்கு வழி செய்ய இயலாததால் மனமுடைந்து 7.1.1998 அன்று விடியற்காலையில் தற்கொலை செய்து கொண்டதாக சி.பி., சி.ஐ.டி. முடிவுக்கு வந்தது என்ற இந்த விவரத்தை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

**கொடைக்கானலில் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**

நம்முடைய செல்லக்குமார் கொடைக்கானல் உட்லன்ஸ் ஹோட்டல் பற்றிச் சொன்னார்கள். **Change of land use** அதிலே அதிகாரிகள் செய்த தவறுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த அதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதை செல்லக்குமார் சுட்டிக்காட்டினார். இதற்கும் வேறு ஒரு கொடைக்கானல் கேசுக்கும் சம்பந்தம் கிடையாது. அது மலை, இது மடு என்பதை மாத்திரம் தம்பி செல்லக்குமாருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அவர்கள் இன்னொன்று சொன்னார்கள்.

**பரிந்துரை செய்த இரண்டு செயலாளர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை**

**டாக்டர் அ.செல்லக்குமார் :** இந்த மூன்று ஹோட்டலுக்கான அனுமதியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சருடைய தகவலுக்கு, பார்வைக்கு வராமல் ஒரு அரசாணை ஒரு அரசிலே பிறப்பிக்கப்படுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசாணை பிறப்பிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை உணர்வு காரணமாக அதை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்குத்தான் நான் பாராட்டும் தெரிவித்தேன். முதலமைச்சர் அவர்கள் இதைத் தட்டிக் கழிக்காமல் தவறு யார் செய்திருந்தாலும் அந்தத் தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தன் ராஜினாமாவை அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**முதல்வர் கலைஞர் :** அவர் சொன்ன கொடைக்கானல் பிரச்சினை வேறு. இந்தக் கொடைக்கானல் பிரச்சினை வேறு. 4 ஆண்டு காலமாக நாட்டிலே விவாதிக்கப்படுவதல்ல இது. அந்த விவகாரமே வேறு; எல்லோரும் தடுத்து, செயலாளர்கள் எல்லாம் தடுத்து, அதைக் கேட்காமல் போடப்பட்ட கையெழுத்து அது. அது நீதிமன்றத்திலேயே ஏற்கெனவே இருந்து தண்டிக்கப்பட்ட விவகாரம். மறுபடியும் நீதிமன்றத்திலே அப்பீலிலே இருக்கிற விவகாரம். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை.

ஆனால், இதில் ஒரு செயலாளர், இன்னொரு செயலாளருக்கிடையே ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அமைச்சர், அந்த மாறுபாடு ஏற்பட்டதும், ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவினர் சென்று அதைப் பார்த்துவிட்டு வந்து விவரம் தெரிந்து கொண்டு வந்து சொன்னார்கள். போனவர்கள் இவர்களுக்குக் கொடுக்கலாம். விதி விலக்கு அளிக்கலாம் என்று சொன்னார்கள். அமைச்சர் அதை ஏற்றுக் கொண்டார்.

இந்த விவரம் எனக்குத் தெரிந்தவுடன் உடனடியாக அதைப் பற்றி விசாரிக்கச் சொல்லி, தலைமைச்செயலாளருக்கு உத்தரவிட்டு, தலைமைச் செயலாளர் அந்த உத்தரவின்படி நடந்து கொண்டு இரண்டு செயலாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஒழுங்கு நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் சொல்ல முடியும்.

அடுத்து 'வோர்ல்ட் டெல்' பற்றி செல்லக்குமார் இங்கே சொன்னார். சென்ற ஆண்டே இதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்திலே பேசி இருக்கின்றோம்.

அவர் இப்போது கூறிய குற்றச்சாட்டு, அந்த நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல. அந்த நிறுவனத்திற்கு ஏன் குளோபல் டெண்டர் போடாமல் இந்தப் பணியினை ஒப்படைத்தீர்கள் என்ற இரண்டு தான்.

### அரசு நிறுவனத்துடன் இணைந்த கூட்டு திட்டங்களில் குளோபல் டெண்டர் தேவையில்லை

குளோபல் டெண்டர் பற்றி நேற்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விளக்கியிருக்கிறார். ஒரு தொழில் தொடங்குவதற்காக தனியாரோ — அல்லது அரசு நிறுவனத்தோடு இணைந்து கூட்டு நிறுவனமாக **Joint Venture** என்ற அடிப்படையிலே முன்வரும் போது அதற்கு குளோபல் டெண்டர் விடத் தேவையில்லை என்பது மரபு.

உதாரணமாக கூற வேண்டுமேயானால் **Ford, Hyundai** போன்ற தொழிற்சாலைகள் குளோபல் டெண்டர் விட்டுத் தரப்படவில்லை. இது தனியார் தொழில் தொடங்குவதற்கு உதாரணம், **M.O.U.** போட்டு விடப்பட்டது.

**Joint Venture**—க்கு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் ஸ்பிக் தொழிற்சாலை கூட்டு நிறுவனத்திற்கு உதாரணம். அதுவும் குளோபல் டெண்டர் விட்டுத் தரப்படவில்லை.

இந்தத் திட்டத்தில் வெளிநாட்டு ஒத்துழைப்பு இருக்கும் வகையில் *30.11.99* அன்று மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 'வோர்ல்ட் டெல்' நிறுவனம் *18.1.2000* அன்று மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறையிலிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்கள் ஏற்படுத்துவதற்கு அடிப்படைத் தேவையான, தேசிய நெடுஞ்சாலைகள், மாநிலச் சாலைகள் மற்றும் இதர சாலைகள் வழியாக **Optic Fibre Cables** அமைக்கத் தேவையான அனுமதி பல்வேறு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தகவல் தொடர்பு சம்பந்தமான தாராள மயமாக்கல் கொள்கையின்படி, இணையம் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு, யார் வேண்டுமானாலும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படி இதுவரை மத்திய அரசிடமிருந்து நூறு நிறுவனங்கள் அனுமதிகளைப் பெற்றுள்ளன. அனுமதி வழங்குதலை மத்திய அரசு தாராளமயமாக்கியதன் நோக்கமே, **VSNL** மற்றும் **DOT** தவிர, மற்ற நிறுவனங்கள் இணைய சேவையை எளிதாக எல்லா இடங்களுக்கும் வழங்கிட வேண்டும் என்பது தான்.

இந்த 'ஆப்டிக் பைபர் நெட்வொர்க்' என்பது, மாநிலம் முழுவதும் தொலைதூரத்தில் உள்ள கிராமங்களிலேகூட இணைய வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான அதிநவீன, அதிவேகம் கொண்ட தொடர்பு சாதனமாகும். இது இணையத்திற்காக காத்திருக்கும் நேரத்தை வெகுவாக குறைத்து விடுகிறது. இந்த நிலையில், 'வோர்ல்ட் டெல்' நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் இணைய மையங்களாக அமைப்பதற்கு முன் வந்துள்ளது.

'வோர்ல்ட் டெல்' நிறுவனம் 'ஆப்டிக் பைபர் நெட்வொர்க்'ஐ தமிழ்நாடு முழுவதும் அமைத்ததற்குப் பிறகு சேவையை கட்டாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, யாரையும் யாரும் நிர்பந்திக்க முடியாது.

**VSNL** என்ற நிறுவனம், நாட்டிற்கு வெளியே இணைய தொடர்பு **(Internet access)** மற்றும் தகவல் இணைப்பு **(Data links)** ஆகியவற்றை வழங்குவதற் கென்றே உருவாக்கப்பட்ட நிறுவனம். மாநிலத்திற்குள் தகவல் தொடர்புக்கு அடிப்படைத் தேவையான கட்டமைப்புகளை அந்த நிறுவனம் வழங்குவதில்லை.

**MTNL** என்ற நிறுவனத்தைப் பொறுத்தவரை மும்பையிலும், டெல்லியிலும் மட்டுமே அது செயல்பட்டு வருகிறது. சென்னையில் இல்லை.

**DOT**—ஐ பொறுத்தவரை தமிழ்நாட்டில் தகவல் தொடர்பு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை செய்ய இதுவரை முன்வரவில்லை. அதனால்தான், சென்னை தொலைபேசித் துறையை ஒரு நிறுவனமாக மாற்றி, அதிக முதலீடுகளைச் செய்யவேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து கோரி வருகிறோம்.

'வோர்ல்ட் டெல்' நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ளது ஒரு கூட்டு நிறுவன ஒப்பந்தம் மட்டுமே. இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது **Tender, Bidding** என்பதெல்லாம் தேவை இல்லை. மாநில மக்களுக்கு பயன்படும் என்று தோன்றும் போது, திறன் பெற்றுள்ள எந்த நிறுவனத்தோடும் இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் **(Joint Venture)** செய்து கொள்ளலாம். இப்படி கூட்டு நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையோ அல்லது உருவாக்கப்படும் சேவைகளையோ, அரசோ அல்லது அரசு நிறுவனங்களோ வாங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே

பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே உரிமை **(Non-exclusive basis)** என்ற அடிப்படை எதுவும் இல்லாத்து.

'வோர்ல்ட் டெல்' நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப்போல, அரசு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் எந்த நிறுவனமும், அதுபோன்றதொரு கூட்டு முயற்சியாகவோ தனியாகவோ ஒப்பந்தத்தை செய்துகொள்ள முன் வரலாம். இதில் ஒளிவு மறைவு எதுவும் கிடையாது.

செல்லக்குமார் சொல்லியது போல இன்போசிஸ், சத்தியம், டிஸ்னெட், அல்காடில், சீமென்ஸ் போன்ற நிறுவனங்கள் வோர்ல்ட் டெல் நிறுவனத்திற்கு இணையாக தமிழ்நாட்டில் இணைய மையங்களுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை அமைக்க முன்வந்தால் வோர்ல்ட் டெல் நிறுவனத்திற்கு என்ன நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டதோ அதே போல அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

**டாக்டர் அ.செல்லக்குமார் :** தனியார் நிறுவனம் என்பதற்கு நான் சொல்கிறேன். 27.7.1999 அன்று கம்பெனி லா போர்டு அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய பங்குதாரர்கள் யார் என்று சொன்னால்

1. **B.H.Kothari, No.11 M.G.Road, Chennai - 34**
2. **Dr.N.Ravi, 302. Pinner Road, Horrow, Middlesex, HAI, 4LB., U.K.**

இவர்கள் இரண்டு பேரும் தான் பங்குதாரர்கள் என்று கம்பெனி லா போர்டிலே மத்திய அரசாங்கத்தினுடைய கம்பெனி லா போர்டிலே பதிவு செய்யப்பட்ட சான்றுகள் நான் வைத்திருக்கிறேன்.

**பேரவைத் தலைவர் :** ஒப்பந்தம் — டெண்டர் கால்ஃபார் பண்ண வேண்டிய முறை தேவையில்லை என்பது முதலமைச்சருடைய வாதம். ஆகையினால் நீங்கள் அதற்கு மேலே வாதம் பண்ணுவதற்கு ஒன்றும் இல்லை.

**முதல்வர் கலைஞர் :** யார் வேண்டுமானாலும் இந்த வேலையைச் செய்யலாம் என்று இருக்கும் போது அதற்கு டெண்டர் தேவையில்லை. எம்.ஓ.யு. போதும் என்பது தான் என்னுடைய வாதம். இங்கு செல்லக்குமார் சொன்ன அந்த கம்பெனிகளும் கூடவரலாம். அது வருவதற்கு தடை கிடையாது.

## புறம்போக்கு நிலத்தில் 20 ஆண்டுகள் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா

நான் இந்த ஆளுநர் உரையில் மிக முக்கியமான ஒரு சீர்திருத்தமாக புறம்போக்கு நிலங்களை 20 ஆண்டுகள் குடியிருந்தவர்களுக்கு அரசுக்குத் தேவைப்படாமல் இருந்தால் அவர்களுக்கே வழங்கப்படும் என்ற ஒரு திட்டம் — நிலச் சீர்திருத்தத்திலே இந்த அரசுக்கு நீண்ட காலமாக இருந்து வருகின்ற ஆர்வத்தினுடைய அடையாளமாகவும் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய வீடு, மனை இவைகளுக்காக நாம் ஆக்கபூர்வமாக செய்யவேண்டிய காரியங்களை செய்து வருகிறோம். இவைகள் எல்லாம் ஒரு தொடர்கதை. நில உச்சவரம்புச் சட்டம் 1960—ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்கின்ற அளவுக்கு அறிவிக்கப்பட்ட போது பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அந்த சீரிய திட்டத்தை காமராஜரையே ஏமாற்றுகின்ற அளவிற்கு அன்றைக்கு பலர் செயல்பட்டு நிலங்களைப் பிரித்துக் கொண்டு அதன் காரணமாக வெற்றி பெற முடியாமல் செய்தார்கள். அன்றைக்கு தமிழ்நாட்டிலே இருந்த நிலத்தில் 24,194 ஏக்கர் தான் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு, 16,330 ஏக்கர் தான் கைப்பற்றப்பட்டு அதில் ஒரு ஏக்கர் கூட உபரி நிலமாக யாருக்கும் வழங்கப்படவில்லை. அதையொட்டித்தான் 15.2.1970ல் நான் முதலமைச்சராக இருந்தபோது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற ஒரு சட்டத்தைப் போட்டு எடுக்கப்பட்ட உபரி நிலம் 1,97,900 ஏக்கர். நிலம் அற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 1,71,673 ஏக்கர். மீதம் உள்ள நிலங்கள் நீதிமன்றங்களிலே பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. 15 ஸ்டாண்டர்டு என்று கொண்டு வந்துவிட்டு பிறகு 1,97,900 ஏக்கர் எடுத்தோம். 1,71,673 பேருக்கு நிலத்தை வழங்கினோம். அதிலே பயன் பெற்ற உழவர்களுடைய எண்ணிக்கை 1,37,236 பேர்.

இவர்களில் ஆதிதிராவிடர்கள் 61,985 பேர். பழங்குடி மக்கள் 204 பேர். 1971—ஆம் ஆண்டு குடியிருப்பு மனைச் சட்டம் என்றவொரு தீவிர சட்டத்தைக் கொண்டு வந்து 1,75,000 பேருக்குக் குடியிருப்புக்களைச் சொந்தமாக்கிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை அனைவரும் அறிவீர்கள். அப்போது மதிப்பிற்குரிய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், அந்த விழா திருத்துறைப்பூண்டியிலே நடைபெற்றபோது — நம்முடைய பழனிச்சாமி அவர்களெல்லாம் ரொம்ப இளைஞர்கள் அப்போது; அந்த விழா நடைபெற்ற போது மணலி சொன்னார்கள்— 'பல தோழர்களுடைய ரத்தத்தைச் சொரிந்தும் கிடைக்காத இந்த வரத்தை ஒரு துளி மையைச் செலவழித்து கருணாநிதி சட்டமாக ஆக்கியிருக்கிறார்' என்று அன்றைக்குப் பேசி பெருமைப்படுத்தினார்.

இதிலே ஆதிதிராவிடர்கள் மாத்திரம் இலட்சத்து இரண்டாயிரம் பேர். இதிலே பலன் பெற்றார்கள். இப்படி வரிசையாக நிலச் சீர்திருத்தத்திலே அக்கறையுள்ள இந்த அரசு இப்போது பட்டாக்கள் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக, 20 ஆண்டுகள் புறம்போக்கு நிலங்களிலே குடியிருந்தவர்களுக்கு மனைப்பட்டா, அரசுக்குத் தேவைப்படாத பட்சத்தில், வழங்குகின்ற அந்தத் திட்டத்தையும் அறிவித்துள்ளது.



நான் எதிர்பார்த்தேன், எல்லோரும் இதுபற்றிப் பேசுவீர்கள் என்று. யாரும் பேசவில்லை. சில நண்பர்கள் பேசியிருக்கின்றீர்கள். எல்லோரும் இதைப்பற்றிப் பேசவில்லை. ஏனென்றால் இது ஒரு மிக முக்கியமான அறிவிப்பு. இருந்தாலும்கூட இப்போது சொல்லப்பட்ட கருத்துக்கள், சி.ஞானசேகரன், கே. சுப்பராயன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் அவர்களெல்லாம் சொல்லிய அந்தக் கருத்துக்களை மனதிலே வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் தயாரிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பணி நியமன சுழற்சி முறையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு கூடுதல் இடம்

ஒரு முக்கியமான அறிவிப்போடு என்னுடைய பேச்சை முடிக்க இருக்கின்றேன். அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்யும்போது சுழற்சி முறையைப் பற்றி அன்பிற்குரிய நண்பர் ராமதாஸ் அவர்களும் மற்றும் இங்கே பேசிய பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர்களும், தீரன் போன்றவர்களும் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு அரசுக்கும் இயல்பாக உள்ள அந்த உணர்வோடு அதை அறிவிக்கின்றேன்.

அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்யும்போது, எந்த இடத்திலே இட ஒதுக்கீடு சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும் என்பது குறித்து அரசின் நிர்வாகச் சீர்திருத்தத்துறை 13–8–1992இல் ஒரு ஆணை, ஆணை எண் 280–ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி, முதல் 10 பணிகளுக்குத் தற்போது பின்பற்றிவரும் சுழற்சி முறையின்படி பொதுப்பட்டியலிலே உள்ளவர்களுக்கு 4 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு இடம் என்றும் இப்போது இருக்கிறது.

இந்த முறையை மாற்றி பொதுப்பட்டியலிலே உள்ளவர்களுக்கு 3 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2 இடங்கள் என்றும் மாற்றியமைக்கும்படி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை ஏற்று இனிமேல் முதல் 10 இடங்களுக்கு சுழற்சி முறையைக் கணக்கிடும்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இதுவரை ஒரு இடம் என்பதற்குப் பதிலாக 2 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்று கூறி, ஆளுநர் உரையின் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய எல்லா உறுப்பினர்களுக்கும், எதிர்த்தும், ஆதரித்தும் பேசிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஞானசேகரன் தூண்டி விடுகிறார். Walk-out உண்டா என்று கேட்கிறார். ஆளுநர் உரையிலே Walk-out மரபல்ல என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். ★

**தமிழ்நாடு சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்கு பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 9-3-2000 அன்று ஆற்றிய உரை.**



# ததீசினி

– இந்திரா பார்த்தசாரதி

டாக்டர் தம்பிமுத்து, 'சரக்கு மாஸ்டர்' வைத்தாவையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பாதி வழுக்கையாயிருந்த தலை ஒரு காலத்தில் முழுக் குடுமியாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. இருந்த பாதியும் அழுது வடியும் பழுப்பு நிறத்திலிருந்தது. ஆங்காங்கே, ஓரிரண்டு வெண் முடிகளின் புன்னகை.

எண்ணெய்க் கறை படிந்த ஒரு காசித் துண்டு தோளை அலங்கரித்தது. அழுக்கு வேட்டி, அழுக்குப் பூணூல்.



வைத்தா, உட்கார மறுத்து நின்று கொண்டிருந்தார். முகத்தில், தாம் சொல்வதை டாக்டர் மறுக்க மாட்டார் என்ற எதிர்ப்பார்ப்பு தெரிந்தது.

தம்பிமுத்துவுக்குத் திடீரென்று கோபம் வந்தது. என்ன மனுஷன் இவன்? இவருடைய அக்காவுக்கு கான்ஸரா இருக்கலாமென்று தான் சந்தேகப்படுவதை அவளுக்குச் சொல்ல வேண்டாமாம்! அவளுக்கு இது அதிர்ச்சியைத் தரலாமென்ற நல்ல எண்ணமெல்லாம் இல்லை, வடிகட்டின சுயநலத்தின் காரணமாக இச்செய்தியை அவளுக்குச் சொல்ல வேண்டாமென்கிறார்! இது ஒரு மனிதப் பிறவியா?!

"என்ன டாக்டர், பேசாமெ இருக்கேள்?"

"என்ன சொல்லறது, உங்க சுயநல காரணத்துக்காக, என்ன வியாதியா இருக்கலாங்கிறத்தை உங்க அக்காகிட்டே சொல்ல வேண்டாங்கிறீங்க, அப்படித்தானே?"

"சுயநலம் இல்லே டாக்டர்... என் நிலைமையையும் நீங்க யோசிச்சுப் பாக்கணும்..."

அவர் 'நிலைமை'யையும், வைத்தா விளக்கிச் சொல்லிவிட்டார்.

ஐந்து பெண்கள். மூத்தவள் அம்பா. இருபது வயது. இரண்டு வயது இடைவெளியில், மற்றையப் பெண்கள்.

'கண்ணே கண்ணெ'ன்று ஓர் உருப்படாத பிள்ளை.

அம்பாவுக்குத் திருமணம் செய்தாக வேண்டும், அதற்குத் தேவை, பணம்.

பணம், வைத்தாவின் அக்காவிடம் இருக்கிறது. அவரிடமில்லை. வைத்தாவின் அக்கா, இரண்டாம் தாரமாகப் போய், போன சுவட்டிலேயே பிறந்தகம் திரும்பி வந்துவிட்டாள். பிறந்தகம், வைத்தா வீடு தான். அவருக்குப் பெற்றோர்கள் இல்லை.

வைத்தாவின் அக்காவுக்கு இறந்த கணவர் மூலம் வந்த கொஞ்ச நஞ்சம் சொத்தும், வைத்தாவின் பெரிய குடும்பப் பராமரிப்பில், கரைந்துவிட்டது. ஆனால், வைத்தாவின் அக்காவுக்கு வேலை கிடைத்தது.

ஒரு பணக்காரக் குடும்பத்தில், அவருடைய தம்பியைப் போல, 'கைவண்ணம்' காட்டும் உத்தியோகம். இருபது வருஷ உத்தியோகத்துக்குப் பிறகு, பத்தாயிர ரூபாய் சேமிப்புடன், தம்பி வீட்டுக்கு மூன்றாண்டுகளுக்கு முன் வந்துவிட்டாள். காரணம், அந்தப் பணக்கார வீட்டுப் பெரியவர் போன பிறகு, அந்த வீட்டுச் சமையல் அடியோடு மாறியது. வைத்தாவின் அக்காவுக்குப் புதிதாக எதுவும் கற்றுக்கொள்ள முடியவில்லை.



தம்பியின் வீட்டுக்கு வந்ததும், அவள் சொன்னாள்: 'இந்தப் பணம் அம்பாவின் கல்யாணத்துக்கு. நல்லவனாகப் பார்..!'

கல்யாணத்துக்காக வைத்திருக்கும் பணத்தைக் கான்ஸருக்காகவா செலவழிக்க முடியும்? வைத்தாவை அடியோடு குற்றம் சொல்ல முடியாது. அவர் மனைவி வாழ்க்கை என்ற யதார்த்தத்தை எதிர்நோக்க வேண்டிய அவசியத்தை அவருக்கு இடித்துரைத்தாள்.

வயது வந்த பெண்ணுக்குத் திருமணம் செய்வது முக்கியமா, அல்லது எழுபது வயது கிழவிக்கு வைத்தியம் செய்யவேண்டியது முக்கியமா?

'எக்ஸிஸ்டென்ஷியல்' பிரச்சினை. வைத்தா, ஆரம்பத் தயக்கத்துக்குப் பிறகு, மனைவி சொல்வதை ஏற்றுக்கொண்டார்.

இதுதான் 'நிலைமை'. மார்பகப் புற்று நோய் என்று உறுதியாகிவிட்டால், வைத்தியம் செய்தாக வேண்டும். வாயுப் பிடிப்புதான் என்று சொல்லி, மருந்து கொடுத்தால், போதாதா?

கிராமத்தை விட்டு, தஞ்சாவூர் போய் மருத்துவப் பரிசோதனை என்றெல்லாம் ஏன் வீண் வேலை? இன்னும் சில தினங்களில் அம்பாவின் திருமணம் நிச்சயமாக்க் கூடும்...

தம்பிமுத்து நாற்காலியிலிருந்து எழுந்தான். ஒன்றும் பேசாமல், கழுத்தில் மாலையாகச் சுற்றி வைத்திருந்த 'ஸ்டதஸ்கோப்பை' மேஜையின் மீது வைத்தான்.

''என்ன டாக்டர்... என் நிலைமை புரிஞ்சுதா?'' வைத்தா சற்றுத் தலையைச் சாய்த்து, தம்பிமுத்துவைக் கேட்டார்.

"எனக்கு நீங்க சொல்லறது புரியுது, ஆனா அந்த அம்மா வந்து கேட்டா, பரிசோதனை செய்துக்கிடறது நல்லதுதான்னு சொல்லுவேன்... நான் டாக்டர்... அதை மறந்துடாதீங்க..."

"அவ வந்து கேக்கலேன்னா?"

தம்பிமுத்து அவரைக் கோபத்துடன் பார்த்தான்.

"கோபப்படாதீங்க டாக்டர்... எனக்கு என் அக்கா பேரிலே பாசம் இருக்கத்தான் இருக்கு... ஆனா ஆத்துக்குப் போனா என் சம்ஸாரம், சும்மா விடமாட்டா... 'டாக்டர்கிட்டே சொல்லிட்டேளா, சொல்லிட்டேளா'ன்னு தொளைச்சு எடுத்துடுவா... அவ பேரிலேயும் தப்பில்லே... கல்யாணத்துக்கு அஞ்சு பொண்ணு இருக்கு..."

"பத்தாயிரம் ரூபாயை வச்சுகிட்டு, அஞ்சு பொண்ணுக்குக் கல்யாணம் செய்யப் போறீங்களா?"





" 'மைக்' கடை நாணுதான் அம்பாவைப் பண்ணிக்கிறேங்கிறான், டாக்டர்..."

தம்பிமுத்து திடுக்கிட்டான்: "அவனா? அவன் வடிகட்டின அயோக்கியன், அரசியல் வாதிகளுக்கு ஜால்ரா, அவனுக்கா கட்டிக் கொடுக்கப் போறேங்கிறீங்க...? மை காட்!"

"என்னோட மத்தப் பொண்களுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறது தன்னோட பொறுப்புன்னு அவன் சொன்னான், டாக்டர்...?"

நாணுவை, தம்பிமுத்து அறிந்தவரை, அவன் கல்யாணம் செய்து வைக்கமாட்டான், 'தொழில்' நடத்துவான் என்று தோன்றிற்று.

அம்பாவை அவனுக்கு நன்றாகத் தெரியும். நல்ல, கெட்டிக்காரப் பெண். பத்தாவது வரைப் படித்துவிட்டு, இரண்டு மூன்று இடத்தில் வேலை செய்துவிட்டு, பிடிக்காமல் இப்பொழுது வீட்டிலிருக்கிறாள்.

அவளுக்கு நர்ஸ் பயிற்சிக்குப்போக வேண்டுமென்ற ஆசை. ஆனால், பிராம்மணப் பெண் அந்த வேலைக்குப் போகக் கூடாதென்று அவள் அம்மா தடுத்துவிட்டாள். அவளுக்கு அம்பா, நாணுவைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரே பிடிவாதம்.

நாணு, வரதட்சிணையாகப் பத்தாயிரம் ரூபாய் கேட்டிருக்கக் கூடும்.

"என்ன டாக்டர்... ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறீங்க...?"

"அம்பாவுக்கு இப்பொ கல்யாணம் செய்துதான் ஆகணுமா? நர்ஸ் பயிற்சிக்குப் போனாள்னா, அவளுக்கே நல்ல வருமானம் வரும்... நல்ல பையனா பாத்துக் கட்டிக்கிறா... நாணுவைப் பத்தித் தெரிஞ்சும், அவனை மருமகனா வரணுங்கிறீங்களே, உங்களை என்ன சொல்லறது...?"

"என் சம்ஸாரம் ஒரே பிடிவாதமா இருக்கா டாக்டர்... அம்பா பொணத்தையும் அதையும் தொடக்கூடாதுன்னு... நான் அடுப்படியிலே வேகறவன், வாயில்லாப் பூச்சி... என் ஆம்படையாளோட பேசி என்னாலே சமாளிக்க முடியாது..."

"சரி... சரி... உங்க அக்கா இங்கே வந்து கேட்டாங்கன்னா, நான் பொய் சொல்ல மாட்டேன்... நீங்க அவங்ககிட்டே என்ன பொய் வேணுமானாலும் சொல்லி எக்கேடு கெட்டுப் போங்க... தயவு செய்து, என் கோபத்தைக் கிளறாதீங்க... போயிட்டு வாங்க, எனக்கு வேலை இருக்கு..." என்றான் தம்பிமுத்து.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, எல்லா நோயாளிகளையும் பார்த்து முடித்தபிறகு, மதிய உணவுக்காக தம்பிமுத்து புறப்படும்போது, அம்பா வந்தாள்.

"என்னம்மா உடம்பு உனக்கு?" என்று அவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"என்னோட அத்தைக்கு வெறும் வாயுப் பிடிப்புதானா, டாக்டர்?"

சுற்றி வளைக்காமல், விஷயத்துக்கு நேரடியாகவே வந்துவிட்டாள் அம்பா.

"அப்பா அப்படிச் சொன்னாரா?"

"ஆமாம். நீங்க அப்படிச் சொன்னதா சொன்னார்".

தம்பிமுத்து சில விநாடிகள் மௌனமாக இருந்தான்.


"என்ன டாக்டர்... ஏன் பேசாமெருக்கீங்க?"

"என்னை உங்கப்பா உங்க அத்தைகிட்டே அப்படிச் சொல்லச் சொன்னார். நான் சொல்ல முடியாதுன்னு சொன்னேன். அவர் நான் சொன்னதா தான் சொல்லப் போறதா சொன்னார்..."

"இதெ பத்தி உங்களுக்கு ஆட்சேபணை கிடையாதா, டாக்டர்?"

"உண்டு. நான் என்னம்மா செய்ய முடியும்? உங்க அத்தை வந்து 'கன்ஸல்ட்' பண்ணாங்க. வீங்கியிருக்கிறதைப் பாத்ததும், தஞ்சாவூர் போய் பரிசோதனை செய்துகிட்டா நல்லதுன்னு தோணிச்சு... அவங்ககிட்டே சொன்னா பயப்படுவாங்களேன்னு,, உங்கப்பாகிட்டே சொன்னேன். அவரு இப்படி 'ரியாக்ட்' பண்ணுவார்னு எனக்கு எப்படிம்மா தெரியும்...?"

"நான் என் அத்தை கிட்டே, பரிசோதனை செய்துண்டா நல்லதுன்னு நீங்க சொன்னதா சொல்லலாமா?" டாக்டர்.



''தாராளமா சொல்லலாம்...''

'' 'கான்ஸர்'னு நினைக்கிறீங்களா, டாக்டர்?''

தம்பிமுத்து சற்றுத் திடுக்கிட்டான். 'இந்தப் பெண்ணால் எப்படி வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேச முடிகிறது?'

''தெரியலே... எதுக்கும் பாத்திடறது நல்லது இல்லியா?''

அம்பா சிறிது நேரம் பேசாமல் நின்றாள்.

''எங்கம்மா பத்தி உங்களுக்குத் தெரியாது, டாக்டர்... அவ ராட்சசி... எங்க அத்தை எங்க குடும்பத்துக்காக ஓடா உழைச்சாங்க. எங்கேயோ யார் வீட்டிலியோ அடுப்படியிலே வெந்துண்டு, நாங்க நன்னா சாப்பிடணும்னு, பணம் அனுப்பிச்சிண்டிருந்தாங்க. டாக்டர்... இப்பொ அவங்களுக்கு வியாதின்னா, அந்தப் பணம் அவங்களுக்கு உபயோகப்படாமெ...''

அவன் இடைமறித்தான் ''எனக்கு எல்லாம் தெரியும்... நீங்க அத்தையைக் கூட்டிகிட்டு தஞ்சாவூருக்கு வாங்க. நானும் வரேன்... 'டெஸ்ட்' பண்ணிப் பார்த்திட்டு தேவையா இருந்தா, பட்டினத்துக்குப் போய் கான்ஸர் இன்ஸ்டிடியூட்லே 'அட்மிட்' பண்ணுவோம். நான் நினைக்கிறது தப்பா இருக்கலாம், தப்பாத்தான்



இருக்கணுங்கிறதுதான் என் பிரார்த்தனை... ஓ.கே...?"

"வைத்தியத்துக்கு எத்தனை செலவாகும், டாக்டர்?"

தம்பிமுத்து உடனே பதில் சொல்லவில்லை. அதுவரை நின்று கொண்டிருந்தவன், நாற்காலியில் உட்கார்ந்தான். சில விநாடிகள் மௌனத்துக்குப் பிறகு சொன்னான். "உங்க அத்தைக் கிட்டேருக்கிற பத்தாயிரம், கான்ஸரா இருந்தா, வைத்தியத்துக்குப் பத்தாது, வைத்தியத்துக்கு வேற ஏற்பாடு என்னாலே பண்ண முடியும். ஆனா நான் வேற ஏற்பாடு செய்யறேன். உங்கப்பாவுக்கோ, உங்கம்மா வுக்கோ தெரிஞ்சா, இந்தப் பத்தாயிரத்தை நாணுகிட்டே கொடுத்துருவாங்க. உங்க கழுத்திலே சுருக்குப்போட... அதனாலே, அத்தை பணம் அத்தை வைத்தியத்துக்குத்தான்னு நீங்க உறுதியா சொல்லணும், சரியா...? அப்பொத்தான் அந்த அயோக்கியனைக் கட்டிக்கிறத்திலேர்ந்து நீங்க தப்பிச்சுக்கலாம், புரிஞ்சுதா?"

அம்பா, கண்களில் நீர் கசிய, டாக்டர் தம்பிமுத்துவைப் பார்த்தாள். உணர்ச்சி வயப்பட்ட நிலையில், அவளால் பேச முடியவில்லை.

அடுத்த நாள் விடியற்காலையில், கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு, தம்பிமுத்து எழுந்துபோய்க் கதவைத் திறந்தான்.

அம்பாவின் அத்தை!

"என்னம்மா இந்தக் காலையிலே வந்திருக்கீங்க; உடம்பு எப்படி இருக்கு...?"

"உள்ளே வரலாமா, டாக்டர்?"

"வாங்க... வாங்க..."

வாடி உலர்ந்திருந்த உடம்பு. ஆனால், கண்களில் ஒரு தீட்சண்யம் தெரிந்தது.

"உட்காருங்கம்மா..."

"இல்லே, வேணாம், வந்ததைச் சொல்லிட்டுப் போயிடறேன்.. எனக்குப் பரிசோதனையும் வேணாம், ஒண்ணும் வேணாம், டாக்டர். எனக்கோ எழுபது வயசாயிடுத்து. இதுவரையிலும் சாதிக்காத எதையும் புதுசா நான் ஒண்ணும் சாதிக்கப் போறதில்லே... அந்தப் பத்தாயிரம் அம்பா கல்யாணத்துக்குத்தான். என்ன வியாதியா இருந்தாலும், அது இருந்துட்டுப் போகட்டும்..."

அவளுக்குப் பேசும்போது மூச்சிறைத்தது. வீட்டில் பெரிய யுத்தம் நடந்திருக்க வேண்டு மென்று அவனுக்குத் தோன்றியது. அம்பா, அவளுடைய பெற்றோர்களுடன் சண்டை போட்டிருக்கக்கூடும். அம்பாவின் அம்மா 'நா வண்ணம்' அந்தக் கிராமத்தில் பிரஸித்தம். மகள் மீதுள்ள கோபத்தையெல்லாம் நாத்தனாரிடம் காட்டியிருப்பாள்.

அம்பாவின் கல்யாணத்தைத் தடுக்க அவரும், அம்பாவும் சேர்ந்து போட்டிருக்கும் இத்திட்டத்தைப் பற்றிக் கூறலாமா என்று அவன் ஒருகணம் யோசித்தான். ஆனால், இதற்கு அவள் உடன்படுவாளோ என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது.

"தோ பாருங்கம்மா, உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கு இல்லையா, கடவுள் அம்பாவின் கல்யாணம் நடக்கும்படியா பாத்துப்பாரு. இந்தப் பணம் உங்க வைத்தியச் செலவுக்குத்தான், கவலைப்படாதீங்க..."

"அந்தக் கடவுள் என் வைத்தியச் செலவைப் பாத்துக்கட்டுமே..."

இவ்வளவு சுலபமாக மடக்கப்படு வோமென்று தம்பிமுத்து எதிர்பார்க்கவில்லை.

"எது இப்பொ முக்கியம்னு கடவுளுக்குத் தெரியும்மா... இப்பொ முக்கியம், உங்க வைத்தியம். உங்களுக்கு ஒரு வியாதியுமே இல்லாமெ இருக்கலாம், பரிசோதனை செய்துக்கிறதிலே என்ன தப்பு...?"

அம்பாவின் அத்தை சிறிது நேரம் பேசாமல் நின்றாள். அவன் கூறியதை அவள் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்று அவனுக்குப் பட்டது.

"அம்பா மனசை உங்களாலே மாத்த முடியாதா, டாக்டர்...? எனக்காக அவ, அவளைப் பெத்தவாளோட இப்படியா சண்டை போடணும்?"

"இது உங்க வீட்டுப் பிரச்னை.. என்னாலே குறுக்கிட முடியாது..."

"நீங்க சொல்லித்தானே அவ இப்படி வழக்காடறா, டாக்டர்... உங்க நல்ல எண்ணமும்



போங்க, எனக்குக் கோபம் வராது, வந்தா, உங்களாலே தாங்கிக்க முடியாது".

இதுவரை தம்பிமுத்து குரலை உயர்த்தி இவ்வாறு பேசியதில்லை.

அவர்கள் போன பிறகு, அசதியினாலா, கோபத்தினாலா, எதனால் ஏற்பட்டது இந்தக் களைப்பு உணர்வு என்று யோசித்தவாறு, அவன் கட்டிலில் சாய்ந்தான்.

அம்பாவின் அத்தை, பரிசோதனை செய்து கொள்ளத் தயாராக இல்லை. அம்பாவுக்கு அவளால் எந்தப் பிரச்னையும் வரக்கூடாதென்று வீட்டை விட்டே போய்விட்டாள். எங்கே போயிருக்கக் கூடும்?

வேறொரு வீட்டில் வேலை செய்வதற்காகவா? இந்த உடம்புடன் அவளால் வேலை செய்ய முடியுமா?

பத்தாயிரம் ரூபாயை அவனிடம் ஒப்படைத்துவிட்டு அவள் போய்விட்டாள்!

'டாக்டர்,' உங்களைத்தான் நான் நம்பறேன் அம்பாவைப் பாத்துக்கோங்கோ!'

இதற்கு என்ன அர்த்தம்..? இதைப்பற்றி யோசித்த போது, அவன் திடுக்கிட்டான்! பத்தாயிரம் ரூபாயை எதற்காக அவனிடம் அவள் கொடுக்கவேண்டும்?

நாலு கிராமம் தள்ளி ஒரு சின்ன ஊரிலிருந்த பாழும் கிணற்றில், அம்பாவின் அத்தை நிம்மதியான மீளா உறக்கத்தில் இருந்தாள் என்ற தகவல், இரண்டு நாட்கள் கழித்து வந்ததும், அம்பாவின் அத்தை திருக்குறள் படித்திருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் தம்பிமுத்துவுக்கு வந்தது.

"கோட்டம் முதல் குமரி வரை" மலரிலிருந்து...

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'.

# பெண்கள் விடுதலைக் கும்மி

☐ மகாகவி பாரதியார்



கும்மியடி! தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டில் எம்மிடங் காட்ட வந்தார், அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி! (கும்மி)

நல்ல விலை கொண்டு நாயை விற்பார் அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார். (கும்மி)

கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்,
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி! (கும்மி)

காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி! (கும்மி)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906


தமிழ் நாடு



தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23











